# வாரணாசிரயில் விபத்தில் மாண்டவர் தொகை 81

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்:131
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 9 ரபி. ஆகி 7 திங்கட்கிழமை [23-6-69]




புதுடில்லி, ஜூன், 22 வாரணாசிக்கருகில் நேற்று இடம்பெற்ற ரயில்விபத்தில் இதுவரை 81 பேர் மரணமாகியிருப்பதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறின.

ரயில கவிழ்ந்த இடத்தில் வேலைகளிலும் நொருங்கிய மீட்புரயில் பெட்டிகளையும் சிக்குண்டு கிடக்கும் பெட்டிகளையும் அகற்றும் வேலைகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

விபத்து நடந்தஇடத்துக்கு மத்திய அரசின் ரயில்வே மந்திரி அவசரமாக விமானத்தில் சென்று பார்வையிட்டுவிட்டுஇன்று புதுடில்லிக்குத் திரும்பினார்.

நேற்று அதிகாலையில் வடகிழக்கு ரயில்வேயில் வரணாசிக்கு சுமார் நூறுகிலோமீட்டர் தொலைவில் பாலமொன்றின் அருகில் இந்த ரயில விபத்து ஏற்பட்டது.

விபத்து ஏற்பட்டவுடனேயே 20 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டது ஆனால் இன்று மாலையில் கிடைத்த கடைசிச் செய்தி இறந்தவர்களின் தொகை 81 என்று கூறியது.

விபத்து நடந்த இடத்தில் மீட்பு வேலைகள் தொடர்ந்து நடக்கின்றன (மூன்வந்த செய்தி 3-ம் பக்கம்)

# 15 தொகுதிகளுக்கு தமிழரசு வேட்பாளர் பட்டியல் தயார்

## தேர்தலில் ஒதுங்கிநிற்க கோப்பாய் எம்.பி.விருப்பம்

நல்லூர், திங்கள் தமிழரசு கட்சியின் அபேட்சகர் தெரிவுக் குழு, வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தொகுதிகளில், இதுவரை 15 தொகுதிகளுக்கான அபேட்சகர்களைத் தெரிவு செய்து விட்டதாக தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

மூதூர் தொகுதியில் தமிழரசு கட்சிசார்பில் போட்டியிட இதுவரை 8 பேர் விண்ணப்பித் திருப்பதாகவும், இவர்களின் விண்ணப்பங்கள் பற்றி மிகவும் கவனமாக பரிசிலனை நடப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மன்னார் நல்லூர், வவுனியா, மூதூர். கல்முனை ஆகிய தொகுதிகளுக்கு இன்னும் அபேட்சகர் தெரிவு செய்யப்படவில்லையென்றும், கிளிநொச்சி தொகுதிக்கு அட்வக்கேட் திரு. எம். ஆலாலசுந்ரதமும், ஊர்காவற்றுறை தொகுதிக்கு, பண்டிதர் க. பொ. இரத்தினமும் போட்டியிடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழரசு சார்பில் போட்டியிடவிருக்கும் அபேட்சகர்களின் விபரம் வருமாறு:

காங்கேசன்துறை — திரு. எஸ். ஜே. வி, செல்வநாயகம், வட்டுக்கோட்டை — திரு. அமிர்தலிங்கம், உடுவில் — திரு. வி. தர்மலிங்கம், கோப்பாய் — திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை, சாவகச்சேரி திரு. வி. என். நவரத்தினம், பருத்தித்துறை — திரு. க. துரைரத்தினம், உடுப்பிட்டி திரு. எஸ். ஜெயக்கொடி, யாழ்ப்பாணம் — திரு. சி. எக்ஸ். மார்ட்டின், ஊர்காவற்றுறை - பண்டிதர் கா. பொ. இரத்தினம், கிளிநொச்சி — திரு. மு. ஆலாலசுந்தரம், திருக்கோணமலை — மாணிக்கராசா, மட்டக்களப்பு — திரு. செ. இராசதுரை, பட்டிருப்பு — திரு. எஸ். எம். இராசமாணிக்கம், கல்குடா திரு. மாணிக்கவாசகர், பொத்துவில் — ஜனுப் மசூர் மௌலானா.

மற்றும் 5 தொகுதிகளுக்கான அபேட்சகர்கள் பற்றிய முடிவு இன்னும் இவ் வாரத்திற்குள் தீர்மானிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

கோப்பாய் தொகுதியில்

## நாவலர் பெருமான்காவியம் உருவாக்க கவிஞர் முயற்சி

### மாலை ஊர்வலத்தில் பங்குபற்றுவார்

யாழ்ப்பாணம், திங். நாவலர் திருவுருவச் சிலை உருவானதைத் தொடர்ந்து நாவலர்பெருமான காவியம் ஒன்று உருவாகவிருக்கிறது.

இக்காவியத்தை கவிஞரும் சைவ பரிபாலனசபையின் துணைக் காரியதரிசியுமான வித்துவான் சைவப்புலவர் கலைமணி க கணபதிப்பிள்ளை மேற்கொள்ளுகின்றார்.

நாளை கொழும்பில நாவலர் உருவச்சிலை ஊர்வலம் ஆரம்பமாகும்போது, இவர் நேரடியாக கலந்துகொண்டு சிலையுடன் யாழ்ப்பாணம் வருவார்.

சைவபரிபாலன சபையின் பிரதிநிதியாக கலைமணி க. கணபதிப்பிள்ளை கலந்து கொள்வார் என சபையின் செயலாளர் திரு. அ. தன பாலசிங்கம் ஸ்ரீலஸ்ரீ நாவலர் சபைக்கு தெரிவித்திருக்கின்றார்.

பூரிசுவாமிகளின்

### பசுவதை எதிர்ப்பு

அமிர்தஸரஸ், ஜூன் 22 பசுவதையை எதிர்த்து தாம்வெகுசீக்கிரத்தில் இயக்கம் ஆரம்பிக்கப்போவதாக திரு. பூரி சங்கராச்சாரிய சுவாமிகள் கூறினார். கிளர்ச்சி அமைதியாகவும், அஹிம்ஸாபூர்வமாகவும் நடக்கும் என்றும் அவர் சொன்னார்.

தொண்டர்கள் திரட்டும் வேலை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது என்றும் கூறினார்.

## கொழும்புமாநகரில்

## கதிரமலை இந்துகோயிலில் பிக்கு ஆக்கிரமிப்பு

### உடன் தகுந்த நடவடிக்கை எடுக்க பிரதமர் உத்தரவு

கொழும்பு, ஞாயிறு கதிர்காமத்தில் கதிரமலை இந்துக் கோயிலினுள் சித்தார்த்த என்ற பௌத்த பிக்கு பலாத்காரமாக உட்புகுந்து கொண்டாரென்றும் இதனால் அங்கு அமைதிக்குப் பாதகம்ஏற்படலாமென்றும் இதுசம்பந்தமாக உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் சுவாமி இராமகிரி, யாழ்ப்பாணப் பிரதிநிதியும் தமிழ்க்காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி பொன்னம்பலத்துக்கும் முன்னாள் வவனியாப் பிரதிநிதி திரு. ஸி. சுந்தரலிங்கம் மற்றும் தமிழ்ப்பிரதிநிதிகளுக்கும் தந்தி மூலம் தெரிவித்திருந்தார்.

இதைத்தொடர்ந்து திரு. ஜி ஜி. பொன்னம்பலம் இன்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுடன் தொடர்புகொண்டார். கண்டிக்குச் சென்றுள்ள பிரதமருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட திரு. பொன்னம்பலம் கதிரமலை இந்துக் கோவிலில் எழுந்துள்ள பிரச்னைக்கு உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதுடன் மோசமான விளைவுகள்தோன்றலாமென்றும் எடுத்துக்காட்டினார்.

இதைத் தொடர்ந்து பிரதமர் திரு. டட்லி சேனநாயகா, பொலீஸ் அதிபருடன் தொடர்புகொண்டு உடனடியாக இவ்விஷயத்தில் நடவடிக்கையெடுக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடத்தலைத் தடுக்கவந்தவர்கள்

## நடுக்கடலில் மீன்களை அபகரித்துசெல்கிறார்களாம்

### மயிலிட்டி மீனவர் கவலை

காங்கேசன்துறை, ஞாயிறு "மயிலிட்டி ஆழ்கடலில் மீனவர்களிடமிருந்து இராணுவ வீரர்கள் துப்பாக்கி முனையில் இலவசமாக மீன்களை எடுத்துச் செல்கின்றனராம்

மயிலிட்டியிலிருந்து சுமார் 30 மைல்களுக்கு அப்பால் மீன்பிடிக்கச்செல்லும் மீனவர்களின் இயந்திரப் படகுகளில், கள்ளக்கடத்தல் தடுப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவ வீரர்கள் துப்பாக்கியுடன் மீனவரின் இயந்திரப் படகுகளில் இறங்கி தாங்கள் விரும்பிய மீன்களை எடுத்துச் செல்கின்றனராம்" பல மைல் தூரம் சென்று கஷ்டப்பட்டு மீன் பிடித்து வரும் பொழுது இராணுவ வீரர்கள் கரையிலிருந்து நான்கு ஐந்து மைல்களுக்கு அருகாமையில் வைத்து இப்படியான தொல்லைகொடுப்பது சம்பந்தமாக எவரும் கவலைப் படுகிறார்கள் இல்லையே" யென்று ஏழை மீனவர் ஒருவர் நமது நிருபரிடம் கவலையுடன் கூறினார்.

மீன்களை கொடுக்க மறுத்தால் அவர்களை துப்பாக்கி முனையில் வைத்து நடுக்கடலில் மீன்களை அபகரித்து வருகின்றனராம். இலங்கையிலேயே மயிலிட்டி ஒரு சிறந்த மீன்பிடி இடமாக விளங்குகையில் இராணுவத்தினரின் அக்கிரமத்தை அரசாங்கம் கவனிக்காமலிருப்பது கவலையளிப்பதாக மீனவர்கள் கூறுகிறார்கள்.

## விவசாயிகள் மகாநாடு கிளிநொச்சியில் நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள் இலங்கைவிவசாயிகள் சம்மேளனத்தின் கிளிநொச்சி

இடமில்லை.

அரசாங்க மந்திரிகளே ஆயிரக்கணக்கான ஏக்கர்

## ஸ்டாலின் மீது வழக்குத் தொடர வேண்டுமாம்

லண்டன், ஜூன் 22 ரஷ்யாவின் குறைந்த பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்.

மன்னார் நல்லூர், வவுனியா, மூதூர், கல்முனை ஆகிய தொகுதிகளுக்கு இன் ... கம், கோப்பாய் — திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை, சாவகச்சேரி திரு. வி. என். நவரத்தினம், பருத்

... வாரத்திற்குள் ... கப்படுமெனத் தெரியவருகிறது.

... கொள்வார் என சபையின் செயலாளர் திரு. ஆ. தன ... மாகிவிட்டது என்றும் கூறினார்.

கோப்பாய் தொகுதியில்

## கதிரவேற்பிள்ளையே மீண்டும் வரவேண்டும்

### தமிழரசு கோப்பாய்க்கிளை தீர்மானம்

நல்லூர், திங்கள்

கோப்பாய் தொகுதியில் அடுத்த பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சிசார்பில்மீண்டும் திரு. எஸ். கதிரவேற்பிள்ளையையே நிறுத்தவேண்டுமென நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் கூடிய கோப்பாய் தொகுதி தமிழரசுக்கட்சி மாவட்டகமிட்டிக் கூட்டத்தில் ஏகமனதாகத் திர்மானிக்கப்பட்டது,

திரு எஸ். நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கோப்பாய் தொகுதி தமிழரசுக் கிளைகளைச் சேர்ந்த சுமார் 60 பேர் கலந்துகொண்டனர். கிளை உறுப்பினர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்க அனுமதியளிக்கப்பட்டனர்.

இக்கூட்டத்தில், தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கமும், செனட்டர் எஸ். நடராசாவும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, ஐந்து காரணங்களைக் கொண்டு தான் அடுத்த தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென தமிழரசு கட்சி தலைவருக்கு அறிவித்திருந்தார். நேற்றைய கூட்டத்தில் இக்காரணங்கள் பற்றி நீண்ட நேரம் ஆராயப்பட்டன.

கோப்பாய் எம் பி. முதலாவதாக தனக்கு உடல் நிலை சரியில்லையென்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன், தேர்தலில் போட்டியிடுவதற்கான பணவசதியில்லையென்றும்கோப்பாய் தொகுதியில் உள்ள சில கிளைகள் தான் போட்டியிடுவதை யிட்டு அதிருப்தி தெரிவித்திருப்பதாகவும் நீண்டாமைப்பிரச்னையில் அதிகமாக தான் தலையிட்டிருப்பதாகவும், ஆட்சிமன்றம் செல்லாது, வெளியிலிருந்து கட்சிவளர்ச்சிக்காக பாடுபடப் போவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

### இன்னும் முடிவு இல்லை

கோப்பாய் தொகுதியில் அடுத்த தேர்தலில போட்டியிடுவது பற்றி தான் இன்னும் முடிவு செய்யவில்லையென்று கோப்பாய் எம். பி. எஸ். கதிரவேற்பிள்ளை நமது நிருபரிடம் நேற்று தெரிவித்தார்.

தாயகம் திரும்பும் இந்தியருக்கு

## ‘டாக்டர்’ படிப்புபெற வசதி கிடைக்கும்

புதுடில்லி, ஜூன் 22

மருத்துவக் கல்லூரிகளில் ப்ரீ-மெடிகல் படிப்புக்கும் எம். பி. பி. எஸ். படிப்புக்கும் பர்மா, இலங்கை, மொசாம்பிக் ஆகியவற்றிலிருந்து வந்துள்ள அகதிகளுக்காகவும், கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்காகவும் சில இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசாங்க ஒதுக்கீட்டிலிருந்து இந்த இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. மத்திய தொழிலாளர் நலம், வேலை வாய்ப்பு, மறுவாழ்விப்பு இலாகாவின் யோசனைகளையடுத்து சுகாதார இலாகா இந்த நடவடிக்கையை செய்திருக்கிறது. குறைந்தது 50 சதவிகித மார்க்குகள் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி அவற்றை மத்திய தொழிலாளர் நலம், வேலை வாய்ப்பு, மறு வாழ்விப்பு இலாகாவுக்கு அனுப்பிவைக்குமாறு ராஜ்ய அரசாங்கங்கள் யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றின் மறுவாழ்வுவிப்பு இலாகாக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த விண்ணப்பங்கள் ஜூன் 30-ம் தேதிக்குள் மத்திய மறுவாழ்விப்பு பிரிவுக்கு வந்து சேர வேண்டும்.

கொழும்புமாநகரில்

## நாவலர் பெருமானின் உருவச்சிலை ஊர்வலம் நாளை ஆரம்பமாகும்

### வழியனுப்பு விழாவில் பிரதமர் உரை; 8000 மாணவர் கலந்து கொள்வர்

(நமது விழா நிருபர்)

யாழ்ப்பாணம், திங்.

நாவலர் பெருமானின் திருவுருவச்சிலை நாளை விவேகானந்தசபையிலிருந்து பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம்வரை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் போது, வீதியின் இருகரையிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் அணிவகுத்து நிற்பார்கள்.

### மக்கள் தரிசனம்

திருவுருவச்சிலை நாளை பிற்பகல் 4 மணிமுதல் இரவு 9 மணிவரை பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலையில் பொதுமக்கள் தரிசனத்திற்காக வைக்கப்படும்.

### வழியனுப்பு விழா

நாளை மாலை 6 மணிக்கு நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் தலைமையில், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் உருவச்சிலை வழியனுப்புவிழா நடைபெறும். இவ்விழாவில் பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா, கல்வி கலாச்சார மந்திரி திரு. ஐ. எம். ஆர் ஏ. இரியகொல்லை, தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், தமிழரசுக்கட்சி தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான், உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம், ஆட்சிமன்ற உறுப்பினர் திரு, பெர்னுட் சொய்சா, திரு. வில்மட் ஏ. பெரேரா, அல்ஹாஜ் ஏ எம். ஏ. அஸீஸ், திரு. ஜேம்ஸ் டீ. இரத்தினம், வண தர்மரத்தின தேரோ, இந்துமாமன்றத் தலைவர் திரு. எஸ். சோமசுந்தரம் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

### கலை நிகழ்ச்சிகள்

இசைப்பேரரசி சேலம் ஜெயலட்சுமியின் இன்னிசைக்கச்சேரியும், வெள்ளவத்தைசைவமங்கையர்கழக மாணவிகளின் பஜனைக் கீதங்களும் இரவு 9 மணி முதல் நடைபெறும்.

### சிலைபற்றி பூரண திருப்தி

நாவலர் உருவச்சிலைவேலைகள் பூர்த்தியடைந்து விட்டன. இச்சிலையை உருவாக்கிய. கலைஞர்மணி, பூரண திருப்தியடைந்துள்ளார். திருவாளர்கள் ஸ்ரீகாந்தா, நீதிராசா, இரத்தினசபாபதி ஆகியோர் இச்சிலையை நேற்றுமுன்தினம் பார்வையிட்டு, தங்கள் திருப்தியைத் தெரிவித்துக்கொண்டனர்.

### 8000 மாணவர் அணிவகுப்பு

நாவலர்விழாவையொட்டி பல்லாயிரக்கணக்கான அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுவருகின்றன. கொழும்புநகரில் நடைபெறும் ஊர்வலத்தில் கலந்துகொள்ள நாட்டின்பல பகுதிகளிலிருந்தும் விருப்பம் தெரிவித்துள்ளனர். மலைநாட்டு பகுதியிலிருந்தும், ஏராளமான மக்கள் இந்த ஊர்வலத்திலும் வழியனுப்பு விழாவிலும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பில் நாளை நடைபெறும் ஊர்வலத்தில் சுமார் 8000 மாணவ மாணவிகள் கலந்துகொள்ள விருக்கின்றனர்.

### வீதிகள் அலங்காரம்

கொழும்பு நகரில் சிலை செல்லும் வீதியின் இரு பக்கங்களிலும், தோரணங்களினுல் அலங்கரித்து வீடுகள், கடைகள் தோறும் வரவேற்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன. சிலை பவனி விழாக்களில், உதவி செய்வதற்காக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் முன்வந்துள்ளார்கள். நூற்றுக்கணக்கான இளைஞர்கள் சிலையுடன் யாழ்ப்பாணம் வந்து நாவலர் விழாவில் பங்குபற்றவிருப்பம் தெரிவித்துள்ளனர்.

## ...கிளிநொச்சியில் நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளிநொச்சி பிரதேச மாநாடு அடுத்த மாதம் 17-ம் தேதி நடைபெறவிருக்கிறது.

இம் மகாநாடு சம்பந்தமாக இலங்கை விவசாயிகள் சம்மேளன கிளிநொச்சி மாவட்ட கமிட்டி வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில கூறப்பட்டிருப்பதாவது:- எமக்கு அரசாங்கத்தால அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. எமது உரிமைகள் மறுக்கப்பட்டன எமக்குக் தரப்பட்ட கூப்பன் அரிசியில ஒரு கொத்து வெட்டப்பட்டது. ரூபாவின் மதிப்பு குறைக்கப்பட்டது. எமது கூப்பன் புத்தகங்கள் பறிக்கப்பட்டன. நீர்மறுக்கப்பட்டது. எமது பிள்ளைகளுக்குபோதிய கல்வி வழங்கப்படவில்லை முதலாளித்துவ அரசியல வாதிகள் எமது பிரச்னைகளைத் தீர்ப்பார்கள் என்று நம்புவதற்கு இடமில்லை.

அரசாங்க மந்திரிகளே ஆயிரக்கணக்கான ஏக்கர் வளமுள்ள நிலங்களையும், அதற்காக தனியானகுளங்களையும் வைத்திருக்கின்றனர் அதே நேரததில் நூற்றுக்குட்பட்ட காணித்துண்டுகளுக்கு பத்தாயிரக்கணக்கான வேலையற்ற வாலிபர்கள் போட்டியிடவேண்டியுள்ளது. விவசாயப்படை ஒன்றை அமைத்து படித்துவிட்டு வேலையற்று குமுறிக்கொண்டிருக்கும்வேலையற்ற வாலிபர்களின் உழைப்பை கொடூரமாக சுரண்டும் சுரண்டல் காரனுக அரசாங்கம் மாறியுள்ளது விவசாயப்படையில் பெரும் ஊழல்களும், உணவு சுகாதாரவசதியின்மையும் நிலவுகின்றது அடுத்த தேர்தலில், விவசாயப்படை வீரர்களை பயன்படுத்துவதற்கான ஆலோசனைகளும், உயர்மட்ட அரசாங்க அதிகாரிகள் மத்தியில் உருவாகியுள்ளது.

மகாவலி கங்கையை வடக்கே திருப்பவேண்டும். விவசாய படையினருக்கு காணிவழங்கவேண்டும். விவசாயிகளிடமிருந்து பறித்த கூப்பன் புததகங்கள் திருப்பிக் கொடுக்கவேண்டும். முழு நிலமும், நீரும், விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும்.

## ... வேண்டுமாம்

லண்டன், ஜூன் 22

ரஷ்யாவின் குறைந்தபட்சம் ஏட்டளவிலான அரசியல் அமைப்புச் சட்டத்தின் சாதாரண குற்றச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல பல குற்றங்களை செய்தார் என்பதற்காக காலஞ்சென்ற ஸ்டாலின் மீது வழக்கு விசாரணை நடத்தப்படவேண்டுமென்று கோருகிருர் நடுத்தர வயது கொண்ட ரஷ்யப்பிரஜை ஒருவர்.

பியோடிர் யாகிர் என்ற அந்த ரஷ்யர் பள்ளிச் சிறுவனாக இருந்த காலத்தில் ராணுவத்தில் ஜெனரலாக இருந்த அவருடைய தந்தை ஸ்டாலின் ஆட்சியின்கீழ் சுட்டுக் கொல்லப்பட்டார், சிறுவனான யாகிரின் தாய்க்கு 18 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது சிறுவன் யாகிர் அரசாங்க உழைப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டான் அங்கு 14 வருடங்கள் அடிமையாக உழைத்து எப்படியோ உயிர் பிழைத்து மீண்ட அவர் இப்போது ஸ்டாலின் மீது வழக்குநடத்தக் கோருகிருர்.

ஸ்டாலினுக்குக் குறைந்தபட்சம் 4 மரண தண்டனைகள், 65வருடக்கடுஞ்சிறைத் தண்டனை விதிக்கலாம் அந்தஅளவுக்கு அவர் கடும் குற்றங்களைப் புரிந்துள்ளார் என்கிருர் யாகிர்.

யாழ். நகரில் நாவலர் பெருவிழா

## 3 பிரமாண்டமான ஊர்வலங்கள்; மாணவர்கோஷ்டியின்பஜனை, அணிவகுப்பு

(நமது அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணம், திங்கள்

நாவலர் பெருவிழாவையொட்டி மூன்று பிரமாண்டமான ஊர்வலங்களை யாழ்ப்பாணத்தில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது. நாவலர் பெருமானின் உருவச்சிலை விசேஷ ஊர்வலமாகச் செல்லும் அலங்கார வண்டிகள் மற்ருெரு ஊர்வலமாகச் செல்லும். நாவலரின் திருவுருவப்படத்தை பூந்தண்டிகையில் மாணவர்கள் சுமந்து கொண்டு ஊர்வலமாகச் செல்வார்கள். மூன்று ஊர்வலமும், வெவ்வேறு பாதை வழியாக நல்லூரை வந்தடையும்.

நேற்று நடந்த கல்லூரி அதிபர்கள் மகாநாட்டில் நாவலர் விழா குழுவினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

நாவலர் விழா சம்பந்தமாக மேலும் அவர்கள் தெரிவித்தாவது:

29 ம் திகதி மாலை 3 மணிக்கு வண்ணை சிவன் கோவிலிலிருந்து நாவலரின் திருவுருவப்பட ஊர்வலம் ஆரம்பமாகும். கோவிலை ஒரு தடவை சுற்றிவந்த பின் ஊர்வலம் புறப்படும்.

மானிப்பாய் இந்து கல்லூரி, பரமேஸ்வரா கல்லூரி, அருணேதயா கல்லூரி, கொழும்புத்துறை மகாவித்தியாலய மாணவர்களின் பஜனைக் கோஷ்டியும் ஊர்வலத்துடன் செல்லும்.

வண்ணை சிவன் கோவிலிலிருந்து நாவலர் பாடசாலை வரை, நாவலர் பாடசாலை மாணவர்கள், நாவலரின் திருவுருவபடத்தை கொண்டுசெல்வார்கள். நாவலர் பாடசாலையிலிருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வரை யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் கொண்டு செல்வார்கள். இந்துக் கல்லூரியிலிருந்து, தட்டாதெரு சந்திவரை, மத்திய கல்லூரி மாணவர்கள் கொண்டுசெல்வார்கள். தட்டாதெரு சந்தியிலிருந்து பிறவுண் ரேட் சந்திவரை பரமேஸ்வராக் கல்லூரி மாணவர்களும் பிறவுண் ரேட் சந்தியிலிருந்து பலாலி ரேட்டு சந்திவரை மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களும் கொண்டு செல்வார்கள். பலாலி ரேட்டு சந்தியிலிருந்து செங்குந்தா கல்லூரிவரை, செங்குந்தமாணவர்களும் நல்லூர்வரை நல்லூர் ஆசிரியர் பயிற்சி கல்லூரி மாணவர்களும் கொண்டு செல்வார்கள்.

திருவுருவப்படத்தின் ஊர்வலத்தின் நீளம் சுமார் 600 யார் வரை இருக்கு மென்றும் இந்த ஊர்வலத்தில் சுமார் 5000 பேர் கலந்து கொள்வார்களென்றும் எதிர்பார்க்கப்படுவதாக, குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஊர்வலத்தில் கல்லூரி மாணவ மாணவிகளின் அணிவகுப்பும், இடையிடையே நடைபெறும். மாணவர்களின் பஜனை கோஷ்டிகளும், ஊர்வலத்தின் இடையில் சென்றுகொண்டிருக்கும். ஊர்வலம் 3 மணிக்கு வண்ணை சிவன் கோவிலிலிருந்து புறப்பட்டு, 6-30 மணிக்கு நல்லூரை வந்தடையும்.

3 மைல் நீளமான இந்த ஊர்வலம் செல்லும் பாதை

4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

காணி:

கச்சேரி நல்லூர் வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 63-ம் நம்பர் கச்சேரி நல்லூர் வீதியில் தொடர்பு கொள்ளவும். 1202

## தேவை

மனேஜர்

ஏழாலை கூட்டுறவுப்பண்டகசாலைக்கு உடனடியாகஒரு மனேஜர் தேவை. J.S.C. அல்லது அதற்கு மேற்பட்டதும், கூட்டுறவுப் பயிற்சி அல்லது வியாபார அனுபவமுள்ளவரும், 25 வயதுக்கு மேற்பட்டவரும் பிணைப் பணம்ரூபா 500/-ம் உறுதிப் பிணை ரூபா2500/-ம் கட்டத் தக்கவராயிருத்தல் வேண்டும். மாதச்சம்பளம் ரூபா 75/- — ரூபா 150/- எல்லாம் உட்பட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 30-6-69க்குப் பிந்தாமல் க. ஜெயராஜா ஏழாலைதெற்கு, சுன்னுகம் என்ற விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் விண்ணப்பிக்கவேண்டும். அத்துடன் நேர்முகப் பரீட்சைக்கு 1-7-69 பி.ப. 4மணிக்கு ஏழாலை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் அத்தாட்சிப் பத்திரங்களுடன் சமுகம் கொடுத்தல் அவசியம். 1047


# சிலை வரவேற்பு குழுதெரிவு

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம்கிராமசபைப் பகுதிக்கு இம்மாதம் 27-ம் திகதி இரவு எட்டு மணிக்கு வருகை தரும் நாவலர் சிலையை வரவேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெறும் கூட்டுப்பிரார்த்தனை சொற்பொழிவுகளை அடுத்து வட்டுக்கோட்டை தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர், சுழிபுரம் கிராமசபைத் தலைவர் ஆகிய இருவரும் சிலைக்கு மாலையிட்டு வரவேற்பார்கள். சகல ஒழுங்குகளையும் கவனிக்க ஒரு குழு தெரியப்பட்டுள்ளது. தலைவர்: சு. கந்தசுவாமி. குழு அங்கத்தவர்: செ. ஸ்ரீநிவாசன் அ. ஆறுமுகம், நா. சிவபாதசுந்தரம், ச. மயில்வாகனம், க. வாமதேவன், கா. நடராசா.


# யாழ்ப்பாண மாநகரசபை

## சோலைவரி2-ம்கந்தாயம் 1969.

1969-ம் ஆண்டு 2-ம் கந்தாயத்துக்கான சோலைவரிப் பணம் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 3 மணிக்கு முன்னர் மாநகரசபைஅலுவலகத்தில்செலுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் 10% வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற்கட்டளைகள் முதலியன மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்றமுகவரிக்கு30-6-69-ம் திகதி பி. ப. 3 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். இவ்விதம் பணம் அனுப்பும்பொழுது, வீட்டு இலக்கம், தெருப்பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்கள் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
20-6-69. 1619


# ஆசிரியர் மரணம்

புத்தளம், ஞாயிறு

புத்தளத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஜனுப் ஏ.எம்.எஸ். இபுருகிம் வதூது பாலாவிக்குச் சமீபமாக நிறுத்தப்பட்ட வானை முந்திச் செல்கையில் பின்னுல் அதிவேகமாக வந்த கார் ஒன்றினுல் மோதி, தூக்கிவீசப்பட்டார். மூளை சிதைந்த நிலையில் புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு முதலிய இடங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டார். கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அவருக்கு மூளையில் சத்திரசிகிச்சை நடைபெற்றறு பெற்று மூன்று மணித்தியாலங்களின்பின் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது

கார்ச்சாரதிமது அருந்தியதாகக் கூறப்படுகிறது. விசாரணையில், விபத்தினுல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.


ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த



சங்கானைப் பட்டினசபை

# கேள்வி அறிவித்தல்

1969-ம் ஆண்டு யூலை மாதம் 5-ம் திகதி முற்பகல் 10 மணிவரை சங்கானைப் பட்டினசபைத் தலைவரால் ''பட்டினசபை வீதி வேலைக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் கேள்விப்பிணையாகரூபா 50-00-ம் கேள்விப் பத்திர விலையாக ரூபா 5-00-ம் செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்..

கேள்விப் பத்திரங்கள் 1969-ம் ஆண்டு யூலை மாதம் 3-ம் திகதிவரை வழங்கப்படும். விண்ணப்பங்கள் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் சமர்ப்பிக்கப்படவேண்டும். மற்றும் விபரங்களைப் பட்டினசபைஅலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி. ஆறுமுகம்
தலைவர்
பட்டினசபை, சங்கானை.
பட்டினசபை அலுவலகம்,
சங்கானை, 20-6-69. 1618


ஹொக்கிப் போட்டியில்

# சென் ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண பாடசாலை ஹொக்கி விளையாட்டுச் சங்கத்தினுல், சகல கல்லூரிகளிடையே நடாத்தப்பட்டு வரும் ஹொக்கிப் போட்டியில், சென். ஜோன்ஸ் கல்லூரியும், கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் பிரிவில் 7—0 கோல்களாலும், இரண்டாவது பிரிவில் 2—0 கோல்களாலும் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தை வெற்றி பெற்றது. (தே. நி)

# வருடாந்த விளையாட்டுப் போட்டி

உடுப்பிட்டி, ஞாயிறு

''மாணவர்கள் நல்ல பழக்கங்களைக் கடைப் பிடிப்பதன் மூலமே எதிர்காலத்தில் சிறந்த வாழ்க்கையை அமைக்க முடியும். எம்மிடம் சகிப்புத்தன்மை இருந்தால் நாட்டில் குற்றச் செயல்களுக்கே இடமில்லை. விளையாட்டின் மூலம் சகிப்புத் தன்மையைப் பழகிக் கொ

# மரதன் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியினரால் மாணவர்களுக்கு இடையே கிராமங்களுக்கூடாக ஓடும் 'மரதன் போட்டி' நடாத்தப்பட்டது.

இப்போட்டியைக் கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி ஆரம்பித்து வைத்தார்.

காந்தி இல்லத்தைச் சேர்ந்த மாணவர்கள் கே. வெள்ளிமலை முதல் இடத்தையும், என். கோபால் இரண்டாமிடத்தையும் மூன்ருவது இடத்தைப் பாரதி இல்லத்தைச் சேர்ந்த பூ. ஜேக்கப்பும், நான்காவது இடத்தை வள்ளுவன் இல்லத்தைச் சேர்ந்த என். வேலமுகனும் பெற்றுக் கொண்டனர்.

# கரபந்தாட்ட போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

கர்வெட்டி விளையாட்டுக் கழகத்திற்கும், ஊர்காவற்றுறை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் 'றேஞ்சஸ்' விளையாட்டுக் கழகம்வெற்றி ஈட்டியது. நடைபெற்ற மூன்று ஆட்டங்களில் இரண்டாவது ஆட்டத்தின் போது கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகம்வெற்றி பெற்றது.

0 0 0

சுருவிலூர் அமரர் நல்லதம்பி ஜே. பி. வெற்றிக் கேடயத்திற்காக நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்கரம்பொன் விளையாட்டுக் கழகம் ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்தது.

# அங்குரார்ப் பணம்

வேலணை, ஞாயிறு

அகில இலங்கை தேசிய கலை நிகழ்ச்சிக் கூட்டுஸ்தாபனத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் சரவணை மணிபுரத்தில் சங்கீதபூஷணம் திரு. பி.சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது.

பொது மக்களிடையே கலை ஆர்வத்தையும் சங்கீதம், நாடகம், நடனம் போன்ற கலைகளில் ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவிக்கவும் பல் வேறு வாத்தியக் குழுவினரை ... கவும் இக் கூட்டுஸ்தாபனம் புதிய திருப்பத்தை ஏற்

# இன்றைய பலன்

ஆனி மாதம் 9-ம் திகதி

23-6-69

மேஷம்- நம்பிக்கை மோசடி நடக்கும், நண்பர்களும் காலை வாரி விடுவர். தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

ரிஷபம்- இதமான வாழ்வு, இன்சொல், பெரியோர்கள் ஆதரவு இத்தனையும் இன்று தப்பாமல் கிட்டும், இறை பக்தி மேலோங்கும்.

துனமிம்- செய்தொழில் சிறப்படையும், சீரான நிலையும் காணும். உயர் பீட ஆதரவும், உரிமையும் கிடைக்கும் இன்று.

கடகம்-பொருள் வரவு, உபசாரம் பொழுது போக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும் செய்தியும் அவசியம் கிடைக்கும்.

சிம்மம்- துன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம் போடும், துணைவரின் உடல் நலன் கெடும், பணமும் பெருமளவில் செலவாகும்.

கன்னி- அடி சறுக்கும் நிகழ்ச்சி இன்று இடம் பெறலாம், ஆணவத்தை அடக்கின் அமைதிக்கு இடமுண்டு.

துலாம்- பேச்சுவன்மையினுல் பெரும் புகழ் சேரும். பெரியோர்களும் ஆசி கூறுவர், அரசியல் வாதிகளின் அதிக செல்வாக்கைப் பெறுவர்.

விருச்சிகம்- நினைத்தது நடக்காது, நிம்மதி பறக்கும் நெடும்பணம் வேண்டாம். பொருள் தவறக் கூடும், அதிக சிந்தனையைத் தவிர்.

தனுசு- தடைப்பட்ட காரியங்கள், நல்ல முடிவு பெறும். தாய்வழிப் பெருமையுண்டு. வாகன நலனுடன் வாழ்விலும் சுகம் காணும்.

மகரம்- கனிவான பேச்சு, காந்தம் போல் பார்வை, கன்னியர் உறவு, காதலுக்கும் இடமுண்டு. கவர்ச்சிகரமான நாள்.

கும்பம்- புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றியுண்டு ஆனந்தநிலை.

மீனம்- உணர்ச்சிவசப்

# ஆங்கில தினம்

புத்தளம், ஞாயிறு

புத்தள வட்டார ஆங்கில தினம் சாந்த அந்திரேயா மகாவித்தியாலய மண்டபத்தில் அரசாங்க அதிபர் திரு. எம். டபிள்யூ. எஸ். குணரத்தின தலைமையில் நடைபெற்றது. புத்தளம் ஸஹிரா மகாவித்தியாலயம், பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம். சாந்த அந்திரேயா சிங்கள மகாவித்தியாலயம், ஆனந்த சிங்கள மகா வித்தியாலயம், சிங்கள மகாவித்தியாலய தபோவாசிங்கள மாாவித்தியாலயம் கற்பிட்டி அல் அக்சா மகாவித்தியாலயம் முதலியன இதில் பங்கு பற்றின.

பாடசாலையில் மாத்திரம் படிப்பு என்பதைவிட்டு மாணவர்கள் வாசிகசாலைகளிலும், வீடுகளிலும் நல்ல அறிவுள்ள நூல்களை ஆராய்ந்து படிக்கவேண்டும். வீடுகளிலும் ஆங்கிலத்தைப் பேசியே பழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டும்'' என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

போட்டிகளில் வெற்றி பெற்றேருக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிழக்கு அ. மி. வித்தியாசாலை பெற்ருர் ஆசிரியர் சங்க புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. வே. சரவணமுத்து, உபதலைவர்: அ. நன்னித்தம்பி, காரியதரிசி: ச. தம்பிராசா, உபகாரியதரிசி: இ. நடராசா, தனுதிகாரி: இ. தம்பிராசா. பதினைந்து பேர்கொண்டசெயற் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

# வாழ்க்கை வளம் பெற விளையாட்டும் தேவை

காங்கேசன்துறை, ஞாயிறு

''வாழ்க்கையை இனிது வளம்பெறச் செய்வதற்கு விளையாட்டுப் போட்டி ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. இளமையிலிருந்து முதுமை வரை திடகாத்திரமாக வாழ்வதற்கு இதுவும் ஓர் உபாயமாகவிருக்கிறது''

இவ்வாறு காங்கேசன் துறை நடேஸ்வராக்கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடபகுதி கல்வி ஆலோசகர் திரு. ஆர். திருநாவுக்கரசு கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,''புத்தகப்படிப்பில் மட்டுமின்றி விளையாட்டுக்களிலும் திறமைசாலிகளாக இருக்கவேண்டும். இக்கல்லூரி அதிபர் இம்முறை எல்லோரும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்தது மிகவும் வரவேற்கத்தக்கது'' என்ருர். விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ரேருக்கு திரு. ஆர். திருநாவுக்கரசு பரிசில்களை வழங்கினுர். இளங்கோ இல்லம் இவ்வருடத்திற்கான சாம்பியன் பரிசை பெற்றது.

# ஆசிரியர் சங்க தீவகக் கிளை

வேலணை, ஞாயிறு

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்க தீவகக் கிளைக் கூட்டம் வேலணையில் திரு. பொ. நடராசா தலைமையில் கூடியது.

தலைவர்- திரு .வே. விசுவலிங்கம். உபதலைவர்- திரு. க முத்துத்தம்பி, திரு. மூ. நடராசா. காரியதரிசி:- திரு. பொ. நடராசா. உபகாரியதரிசி-திரு. ஐ. சிவசுப்பிரமணியம். தனுதிகாரி-திரு. கா. நடராசா. உபதனுதிகாரி-திரு. க. சி. தர்மலிங்கம். 4 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

# மீன்பிடிப் பயிற்சி

காங்கேசன்துறை, ஞாயிறு

மயிலிட்டியின் மீன்பிடிப் பயிற்சி வகுப்புக்கான ஏற்பாட்டை மீன்பிடிக்கூட்டுத் தாபனம் ஒழுங்குசெய்துள்ளது இக்கூட்டுத்தாபனப் பயிற்சியில் மயிலிட்டியிலுள்ள பல மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் பங்கு கொள்ளவிருக்கின்றன.

இம்மாதம் 28ந் திகதி மயிலிட்டி ஞேமன்கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறும் இப்பயிற்சி நாளில் உணவு இலதசமாக பயிற்சிக்காரருக்கு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது.

# ரூ. 1 லட்சம் செலவில் நூல்நிலையம்

அநுராதபுரம், ஞாயிறு

அநுராதபுரத்தில் பொது மராமத்து இலாகாவுக்கு முன்பாக ஒரு லட்ச ரூபாய் செலவில் ஒரு மத்திய நூல் நிலையம் கட்டப்படுகின்றது. பிரதமரும் கல்வி அமைச்சரும் இந்த நூல் நிலையத் திறப்பு விழாவில் பங்கு பற்றுவார்களென அறியப்படுகின்றது.


பீடைகள், களைகளிடமிருந்து உங்கள் நெற்பயிரைக் காப்பாற்றுங்கள்.




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த

# உயிரா மானமா



வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜிகணேசன் ★ பத்மினி
★ கே. ஆர். விஜயா ★ நாகேஷ்
நடித்த

# திருமால் பெருமை



மகத்தான 4-வது வாரம்

இங்ஸ்லி (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



ஜெய்சங்கர்
★
ஜெயலலிதா
★
நாகேஷ்
★
குமாரி சச்சு
★
சோ, மனோரமா
(சொந்தக் குரலில் பாடி) நடித்த

நகைச்சுவைச் சித்திரம்

# பொம்மலாட்டம்



கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
ராஜ் (நீர்கொழும்பு)
ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)
ஆகிய திரைகளில் திரையிடப்படுகின்றது.
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
சிவாஜி, கே. ஆர். விஜயா
முத்துராமன், கீதாஞ்சலி, பாண்டியன்
நடித்த

# நெஞ்சிருக்கும் வரை


சகிப்புத்தன்மை இருந்தால் நாட்டில் குற்றச் செயல்களுக்கே இடமில்லை. விளையாட்டின் மூலம் சகிப்புத் தன்மையைப் பழகிக் கொள்ளும் வாய்ப்புண்டு'' என உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. மு. சிவசிதம்பரம் புலோலி தெற்கு, புற்றளை மகா வித்தியாலய இல்லங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

வடபகுதிக் கல்வி அதிபர் திரு. தணிகாசலமும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மாணிக்கவாசகர் இல்லம் முதலிடத்தையும், நாவுக்கரசர் இல்லம் இரண்டாமிடத்தையும், ஞானசம்பந்தர் இல்லம் மூன்ருமிடத்தையும், சுந்தரர் இல்லம் நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்டன. திருமதி தணிகாசலம் பரிசில்களை வழங்கினர்.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45.
தேவகுமார் - மாலசிங்க
நடித்த
மேரே லால்
(ஹிந்தி)
(கொழும்பில் 200 நாட்களுக்கு மேல் ஓடியபடம்.

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி ஆர். — ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் — ஜெயலலிதா
நடித்த
நான்
(ஈஸ்ட்மென் கலர்)

MANOHARA
JAFFNA
Daily 4 Shows
YUL BRYNNER as the
Double Man
The Best Thriller - 1968

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Pre-Poya, Poya 4 Shows
Jean-Paul Belmondo
Ursula Andress
in
CHINESE ADVENTURES IN CHINA


...மிக்கவர்களை ஊக்குவிக்கவும் பல் வேறு வாத்தியக் குழுவினர்களை தோற்றுவிக்கவும் இக் கூட்டுஸ்தாபனம் புதிய திருப்பத்தை ஏற்படுத்த முன்வந்துள்ளது என தலைமைஉரையின் போது தெரிவிக்கப்பட்டது.

உத்தியோகஸ்தர் விபரம் வருமாறு:- தலைவர்: திரு. சி. ஞானேஸ்வரன். காரியதரிசி: திரு. இ. சற்குருநாதன். போஷகர்: திரு. பேர. சந்திரசேகரம்.

தனதிகாரி: திரு. க. யோகராசா. 20 பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## இடமாற்றம்ரத்து

வல்வெட்டித்துறை, ஞாயிறு

அல்வாய் அம்பாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றி வரும் திருமதி வேலும் மயிலும் கனகம்மா அடுத்த மாதம் தொடக்கம் வல்வை சிவகுரு வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை தொடர்ந்து பெற்ருர் ஆசிரியர் சங்கம் மேலிடத்துக்குச் செய்த கோரிக்கையைத் தொடர்ந்து இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## மின்தறி நிலையம்

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க சமாஜத்தினரால் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் மின்தறிநிலையம் இம்மாதம் பிற்பகுதியில் இயங்கவிருக்கிறது. இணைப்புவேலைகள் பூர்த்தியாகும் கட்டத்திலுள்ளன.

கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றியுண்டு ஆனந்தநிலை.

மீனம்- உணர்ச்சிவசப்படுவதால் காரியம் தடைப்படலாம். அமைதியுடன் செயலாற்றின் வெற்றி அருகிலுண்டு.

— சோதிடக்கலாநிதி —

திருமலை
க. வேலுப்பிள்ளை

## நீர்கொழும்பு இந்துவாலிபர்சங்கம்

நீர்கொழும்பு, ஞாயிறு

நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் 38வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 7ந் திகதி சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:- காப்பாளர்: செனட்டர் திரு. த. நீதிராசா, தலைவர்: திரு. சி. சண்முகநாதன், உபதலைவர்கள்: திரு. தா. சண்முகநாதன், திரு. அ. சுரேந்திரன், திரு. ஜெயம்விஜயரத்தினம், திரு. பொ. கந்தசாமி, பொதுச் செயலாளர்: திரு. இ. பேரின்பநாயகம், துணைச்செயலாளர்: திரு. ந. தெய்வேந்திரன், நிர்வாகச் செயலாளர்: திரு. ந. தியாகலிங்கம், பொருளாளர்: திரு. சி. முருகையா, துணைப்பொருளாளர்: திரு. க. விஸ்வநாதன், நூல்நிலையக்காப்பாளர்: திரு தா. செகராசசிங்கம், உடற்பயிற்சிச் செயலாளர்: திரு. த. எதிர்மன்னசிங்கம்.


"ராதா"

# பத்மினி ஜவ்வாது பத்தி

நல்ல சுகந்த மணமுள்ள பத்மினி ஜவ்வாது பத்தியை பாவித்து மகிழுங்கள். இதிலுள்ள வாசனை நீங்கள் விரும்பக்கூடிய நறுமணம் உள்ளது. உங்கள் இல்லங்களில் நறுமணம்கமழ பாவித்து இன்புறுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
ராதா பெர்பியூமரி அன் ராதா புறடக்ஸ்

ஏகவிநியோகஸ்தர்கள்:

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.)

53, கே. கே. எஸ். றேட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன-சோவியத் எல்லைப்பிரச்னைபற்றி பேச்சுவார்த்தைகள் ஆரம்பம்

மாஸ்கோ, ஜூன் 22

சோவியத் யூனியனுக்கும் சீனுவுக்குமிடையில் எல்லைத் தகராறுகள் கப்பல் போக்குவரத்துக்கள் பற்றிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியிருப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

சோவியத் யூனியனின் ஆஸிபநகரான காபரோஸ்க்கில் சீன-சோவியத் எல்லைக் கமிஷன் அதிகாரிகள் கடந்த புதன்கிழமையன்று பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக சோவியத்செய்தி ஸ்தாபனம் கூறியது.

சீனுவுக்கும் சோவியத்யூனியனுக்குமிடையில் தகராறுகளுக்குள்ளாகியிருக்கும் எல்லைப்பிரதேசங்கள் பற்றியும், நதிகளில் போக்குவரத்துக்கள் பற்றியும் இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது ஆலோசிக்கப்படும் என்று தெரிகின்றது. அண்மைக் காலத்தில் இரு பகுதி காவலர்களுக்குமிடையில் மோதல்கள் நிகழக்காரணமாய்இருந்த ஒசூரி ஆற்றின் எல்லைப்பகுதி பற்றியும் இந்தப்பேச்சுக்களில் ஆலோசிக்கப்படும்.

கடந்த மார்ச் மாதம் ஒசூரி ஆற்றிலுள்ளடமான்ஸ்கி தீவில் இருதரப்புக்காவலர்களுக்குமிடையில் பலத்த மோதல்களும் அதனுல் மோசமான இரத்தக்களரியும் ஏற்பட்டது. அதன் பிறகு பல இடங்களில் பல தடவைகள் மோதல்கள் நிகழ்ந்தன. சோவியத் யூனியன் இந்த மோதல்களுக்கு காரணமாய் இருக்கும் பிரச்னைகள் பற்றி ஆலோசிக்க பலதடவைகள் சீனுவுக்கு அழைப்புவிடுத்தும் சீனு அலட்சியமாக இருந்து வந்தது தற்பொழுது இருநாடுகளும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருப்பது கம்யூனிஸ்ட் நாடுகளில் பெரிதும் வரவேற்கப்படுவதாகக் கருதப்படுகின்றது.

# ரொடீஷிய இனப்பாகுபாடு அமைதிக்கு பெரும்ஆபத்து

## யுதாண்ட் எச்சரிக்கிறர்

நியூயோர்க், ஜூன் 22

ரொடீஷியாவில் நடைபெற்ற வாக்குகணிப்பை உலக ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் கண்டித்திருக்கிருர்.

ரொடீஷிய சுதேசிகளான கறுப்புமக்களை ஒதுக்கி வைப்பதற்கு வகைசெய்யும் வகையில் சட்டவிரோத ஆட்சியாளர் அயன்ஸ்மித் தயாரித்துள்ள புதிய அரசியல் திட்டத்தின் மீது கடந்த 20-ம் திகதி நடைபெற்ற பொதுசனவாக் கெடுப்பு ஐ. நா. சாஸனத்துக்கு முற்றிலும் முரணுனது என்று யுதாண்ட் கண்டித்திருக்கிருர்.

ரொடீஷிய ஆட்சியின் இனத்துவேஷக் கொள்கை உலக அமைதிக்கே ஆபத்தாகவிருக்கிறது. என்று யுதாண்ட் கூறிஞர்.

இதற்கிடையில் அடுத்த நவம்பர் 11-ம் திகதிவாக்கில் ரொடீஷியா தன்னை குடியரசாகப் பிரகடனப் படுத்திக் கொள்ளும் என்று அயன்ஸ்மித் அறிவித்திருக்கிருர். 20-ம் திகதி நடைபெற்ற வாக்குகணிப்பில் அவரது அரசியல் திட்டத்துக்கு பெரும்பான்மையான ஆதரவுகிடைத்துள்ளது.

ரொடீஷியாவிலுள்ள ஆபிரிக்கர்களின் கழகம் தொடர்ந்து அயன்ஸ்மித் ஆட்சிக்கு எதிராக கொரில்லா போரை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

# 7457 பேர் கைது

கோலாலம்பூர், ஜூன் 22

மலேஷியாவில் இது வரை இனக்கலவரம் காரணமாக 7457 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சென்ற மாதம் 13-ந் திகதியிலிருந்து கைதானவர்களின் எண்ணிக்கையே இது.

கலவரங்களின் போது 186 பேர் கொல்லப்பட்டனர்.

ரஷ்யாவில்

# அடிப்படை உரிமைகள் ஒடுக்கப்படுகின்றனவாம்

## ஐ. நா. வில் புகார்

# யார் ஜனாதிபதி?

## காங்கிரஸ் கட்சிக்கு கவலை

# "விஞ்ஞானம் வாழ்வுடன் கலக்க வேண்டும்"

பருத்தித்துறை, ஞாயிறு

"நமது நாட்டு மாணவர் வெறும் புத்தகப் பூச்சிகளாக இருக்காது, தமது சூழலை நன்குணர்ந்து அதை நல்ல முறையில் மாற்றி அமைக்கவும், சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், விஞ்ஞானத்தை வாழ்க்கையுடன் கலக்க வேண்டும். யாழ்ப்பாணப் பகுதி மாணவர் இங்கு சிறந்து விளங்கும் நீரியல் உயிரியல் ஆராய்ச்சிகளில் நேரடியாக ஈடுபட்டு வருவது, நாட்டின் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்கு ஒருநல்ல சகுனமாகும்."

இவ்வாறு மகாவித்தியாதிகாரி திரு. எச். பி. ஜே. அலெஸ் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடந்த விஞ்ஞான ஆசிரியர் மகாநாட்டில் உரைநிகழ்த்தியபோது கூறினர். வட மாநில விஞ்ஞான வித்தியாதரிசி திரு. எம். அற்புதநாதன் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் திரு. அலெஸ் தொண்டமானுறு உயிரியல், நீரியல் ஆராய்ச்சிகளை மிகப் புகழ்ந்து பாராட்டினர்.

செயலாளர் திரு. கே. சிவபாதசுந்தரம் நன்றி கூறினர்.

# நெடுங்கேணியில் சுகாதார விழா

நெடுங்கேணி, சனி

நெடுங்கேணியில் சுகாதாரவிழா நெடுங்கேணி மகாவித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திரு. ஆர். இராசநாயகம் தலைமையில் கொண்டாடப்பட்டது. சுகாதாரம்சம்பந்தமான காட்சிகளும், சொற்பொழிவுகளும் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன.

இவ்விழாவில் மலேரியா ஒழிப்பு [illegible] கருத்தரங்கு [illegible] இடம்பெற்றது. மேற்படி கருத்தரங்கில் [illegible]

# "இளமைப்பருவமே சமய வாழ்வுக்கு ஏற்ற காலம்"

## குருபூசைவிழாவில் பண்டிதை பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

சைவத்துக்கும் தமிழுக்கும் தலைசிறந்த பாண்டி நாட்டிலே பாண்டிய மன்னன் பொருளையும் படையையும் பெருக்குவதில் விருப்பமுற்றபொழுதுமுதலமைச்சராகிய திருவாதவூரர் அரசவாழ்க்கையில் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்தார். தான் சிவநெறிப் பற்றுடையவராய் வாழ்ந்ததோடு மக்களையும் அந்நெறிப்படுத்த முனைந்தார். உலகநெறி வாழ்க்கையை மறந்து ஞானநெறி வாழ்க்கையை வாழ்ந்து மக்களையும் செந்நெறிப் படுத்திய அருளாளராக விளங்கினர். பாண்டியன் பொருளைச் சிவநெறிக்காக செலவுசெய்து மன்னனுக்கும் அறத்தைச் சம்பாதித்து கொடுத்துள்ளார்.

திருப்பெருந்துறையிலிருந்து அவரது பிரயாணம் ஆரம்பமாகிறது. அவர் தமக்கு தேவையற்ற பெருநிலையாகப் பிறக்கக்கூடாதென்பதை வலியுறுத்துகின்ருர். அதுவே சைவசித்சாந்த நிலையாகும். தன்னுடைய நிலை இறைவனுடைய நிலை என்பதனை உணருகிருர். திருவாசகக் கண்ணீர் தெய்வக் கண்ணீராகும்.

வெள்ளிக்கிழமை அன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற மணிவாசகர் குருபூசையின் போது சிறப்புச் சொற்பொழிவாற்றிய செல்விதங்கம்மா அப்பாக்குட்டி மணிவாசகர் பற்றி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு சொன்னர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

போப் ஐயர் தமிழ் கற்ற மேலைநாட்டறிஞர். அவர் திருவாசகத்தை கருத்துடன் படித்தவர். திருவாசகத்தில் உருகாதார்ஒருவாசகத்திற்கும் உருகார். அவர் தமிழ்நாட்டில் உள்ள தனது நண்பரொருவருக்கு கடிதமெழுதினர். கடிதத்தின் மேல் ஓயாதுரைப்பேன் யான் என எழுதியபொழுது அவரது கண்களிலிருந்து கண்ணீர் மல்கிக் கடிதத்தில் விழுந்துவிட்டது. கண்ணீர் விழுந்த கடிதத்தையே அவருக்கு அனுப்பி அக் கடிதத்தில் அடிக்குறிப்பையும் எழுதினர். கண்ணீர் விழுந்த கடிதத்தையே உங்களுக்கு அனுப்புகிறேன். அக் கண்ணீர் தெய்வக் கண்ணீராகும். அதைவிடுத்து வேறு கடிதம் எழுதவில்லையெனக் குறிப்பிட்டமை நமதுமனதைக் கசிந்துருக வைக்கின்றது.

சமய வாழ்க்கைக்கு இளம் பருவம்தான் ஏற்ற காலம். இளமையில்இறைவனிடத்து அன்பு செய்யவேண்டும்.

சைவம் - திருவாசகம் - தமிழ் திருக்கோவையாராகும். சிதம்பரத்திலே இறைவனே இதற்கு கையெழுத்திட்டுள்ளார். உள்ளத்திற்கு அமைதியை தரும் ஞானநெறியாகிய திருவாசகத்தை நாமனைவரும் பண்ணுடன் ஓதி உளத்துக்கு அமைதியை தேடி வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோமாக.

# தி. மு. க.வை தடைசெய்யும் உத்தேசம் இல்லை

## பிரதமர் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஞாயிறு

இலங்கையிலுள்ள [illegible]

# திருமலைச் செய்திகள்

## இஸ்லாமிய சமூகசேவை இயக்கம்

தம்பலகமம் இஸ்லாமிய சமூகசேவை இயக்கக் கூட்டம் மேற்படி சங்கக் கட்டிடத்தில் ஜனுப் என். எம். ஹனிபா தலைமையில் நடைபெற்ற போது 25 முக்கிய உறுப்பினர் பங்குபற்றினர். இக்கூட்டத்தில் மீன்பிடி இலாகாவால் அமைக்கப்பட்ட வேடன் துறை என்னும் முக்கிய வீதிகவனிப்பின்றி சிதைந்து சீரழிந்துள்ளது என்றும் எனவே இவ்வீதியை நல்ல முறையில் செப்பனிட்டுத் தருமாறு போக்குவரத்துப்பகுதியினரை கேட்பதென்றும் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

## மூவாயிரம் ரூபா நன்கொடை

விளையாட்டு மைதானம் ஒன்று தம்பலகமத்தில் அமைக்க விளையாட்டுத் துறை அமைச்சிடம் தம்பலகமம் கிராமச் சபை நிதி கோரியிருந்தது. மேற்படி கோரிக்கைக்கு அமைய அரசாங்கத்தின் விளையாட்டுப்பகுதியினர் மூவாயிரம் ரூபா நன்கொடை வழங்கியுள்ளனர்.

## அமைச்சருக்கு அவசரக் கடிதம்

திருக்கோணமலையிலுள்ள அன்புவழிபுரம், மிகுந்தபுரம், அபயபுரா, பாலையூற்று, பூம்புகார், ஜன்னுபுரம் ஆகிய இடங்களிலுள்ள குடியேற்ற வாசிகளின் நலனைக் கருதி ஐக்கிய தேசியக்கட்சி திருமலைக் கிளையின் உபதலைவர் லி. ஆர். நவரத்தினராஜா தபால்தந்தி அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமவுக்கு அனுப்பிய அவசரக் கடிதத்தில் தற்போது தங்களால் ஆரம்பிக்கவிருக்கும் திருமலை மேற்கு உபதபால் நிலையத்தைக் கூடிய விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை ஒழுங்கு செய்ய வேண்டும் என்று கேட்டுள்ளார்.

## எம்.பிக்கு

# நாவலர்போன்றபெருமக்களை உருவாக்கவேண்டும்

யாழ்ப்பாணம், திங்கள்

"நாவலர் பெருமானுக்கு விழா எடுத்து உருவச்சிலை நிறுவுவதன் மூலம் நமது பணி ஓய்ந்து விடவில்லை. நாவலர் போன்ற பெரியார்களை வருங்காலத்தில் உருவாக்கி தமிழ்மொழியையும் சைவ சமயத்தையும் பாதுகாக்க வேண்டும் அந்தப் பணி அதிபர்களாகிய உங்கள் கையில் தான் இருக்கிறது"

நாவலர் விழா சம்பந்தமாக நேற்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கூட்டப்பட்ட கல்லூரி அதிபர்கள் மகாநாட்டிற்கு நாவலர் விழா குழு பொதுச் செயலாளர் திரு. எம். சிறிகாந்தா தலைமைவகித்துப் பேசும் போது மேற்கண்டவாறு கூறினர். வடபிரதேச கல்வி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலமும் இம்மகாநாட்டில் கலந்து கொண்டார்.

சுமார் 25 அதிபர்கள் கலந்து கொண்ட இம்மகாநாட்டில் திரு. எம். சிறிகாந்தா மேலும் கூறியதாவது: நாவலர் விழாவை தொடர்ந்து விரிவான திட்டத்தை உங்கள் ஆலோசனையுடன் அமுலுக்கு கொண்டுவரத் தீர்மானித்திருக்கிறேன்.

நாவலர் பெருமான்யார்? அவர் சைவத்திற்கும் தமிழுக்கும் செய்தபணி என்ன என்பதை நாம் நமது சிறுவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும் அதற்கு இப்படியான பெருவிழாக்கள், ஊர்வலங்கள் பயன்படும்.

சேக்கிழார் என்ருல் யார் என்று கடந்த 5 வருடத்திற்கு முன் இங்கு பலருக்குத் தெரியாது. சேக்கிழார் மன்றம் நிறுவப்பட்ட பொழுது ஆதரவு மிகக்குறைவாகவே இருந்தது. சேக்கிழார் திருவுருவப்படத்தை ஊர்வலமாக எடுத்துச்சென்ற பொழுதுதான் மக்கள் அவரைப் பற்றி அறியத் தலைப்பட்டார்கள். அதன் பின் வருடா வருடம் சேக்கிழார் விழாவிற்கு ஆதரவு அதிகரித்தது சேக்கிழார் செய்தபணியை இன்றுள்ள மாணவர்கள் நன்கு அறிந்துள்ளார்கள்.

நாவலருக்கும் நாம் வருடா வருடம் விழா வெடுத்து, அவர் செய்த பணிகளை, மக்களிடம் எடுத்துக் கூறவேண்டும் இதற்கு நீங்கள் பூரண

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ரஷ்யாவில்

## அடிப்படை உரிமைகள் ஒடுக்கப்படுகின்றனவாம்

### ஐ. நா. வில் புகார்

ஐக்கிய நாடுகள் (நியூயோர்க்), ஜூன் 22

ரஷ்யாவில் மக்களின் அடிப்படை உரிமைகளை ஒடுக்குவது பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று கோரும் ஒரு மகஜர் நீண்ட கால தாமதத்திற்கு பிறகு ஐ. நா. தலைமைக் காரியாலயத்திற்கு வந்து சேர்ந்துள்ளதாக அதிகாரிகள் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

இந்த மகஜரில் 54 சோவியத் பிரஜைகள் கையெழுத்திட்டிருக்கிறார்களாம்.

இந்த மகஜரின் புகைப்படப்பிரதி லண்டனில் உள்ள ஒரு சர்வதேச ஸ்தாபனத்தின் மூலம் இங்கு வந்து சேர்ந்தது என்று அதிகாரிகள் கூறினர். அந்த ஸ்தாபனத்திற்கு அது எவ்வாறு கிடைத்தது என்று அவர்கள் கூறவில்லை.

மாஸ்கோவில் உள்ள ஐ. நா. தகவல் நிலையத்தில் தங்கள் மகஜரைச் சமர்ப்பிக்க சிலர் முயன்றார்கள் என்றும், அம்முயற்சி வெற்றி பெறவில்லை என்றும் மாஸ்கோவிலிருந்து தகவல் வந்தது. இந்த விஷயத்தை மாஸ்கோவில் உள்ள தகவல்நிலையத்தில் ஐ. நா. பொதுக்காரியதரிசி விசாரிக்கப் போவதாக ஐ. நா. அதிகாரி ஒருவர் கூறினார்

தனிப்பட்டவர்களிடமிருந்து தஸ்தாவேஜுகளைப் பெற தகவல் நிலையத்திற்கு அதிகாரம்இல்லை என்று கூறுவது சரியில்லை என்று அவர் சொன்னார்.

சோவியத் பிரஜைகள் சமர்ப்பித்துள்ள இம்மகஜரின் மொழிபெயர்க்கப்பட்டபிரதிகள் ஐ. நா. பொருளாதார, சமூக கவுன்சிலுக்கும், மனித உரிமைகள் பற்றிய அதன் குழுவுக்கும், சிறுபான்மையினர் பாதுகாப்பு உபகுழுவுக்கும் அனுப்பப்படும் என்று அவர் கூறினார்.

இந்த மகஜர் பிரசுரிக்கப்படாது. ஆனால், அது பற்றி கருத்து கூறுமாறு சோவியத் அரசு கேட்கப்படும்.

இந்த மகஜரில் கையெழுத்திட்டுள்ளவர்களில் சிலர் மீது பழி வாங்குதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஐந்து பேர்களுக்கு உத்தியோகம் போய்விட்டது. ஒருவர் பைத்தியக்காரர் விடுதிக்கு அனுப்பப்பட்டுவிட்டாராம்.

## கீழ்வெண்மணி சம்பவங்கள்

### விசாரிக்க விசேஷ நீதிமன்றம்

சென்னை, ஜூன் 22

சென்றவருடம் கீழ்வெண்மணிக் கிராமத்தில் நடந்த அசம்பாவித சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்த விசேஷ மாஜிஸ்திரேட் நீதிமன்றம் நியமிக்கப்பட்டுள்ளது.

நாகபட்டினத்தில் இந்தநீதிமன்றம் மூன்றுமாத காலம் செயல்படும். கீழ்வெண்மணிக் கிராமத்தில் நடைபெற்ற தீவைப்பு சம்பவத்தின்போது 40க்கு மேற்பட்டோர் உயிருடன் எரிக்கப்பட்டது தெரிந்ததே.

## வாரணசி ரயில் விபத்தில் இறந்தவர்கள் 62 பேர்

### சமீபகாலத்தில் நிகழ்ந்த கோரசம்பவம்

புதுடில்லி, ஜூன் 22

உத்தரபிரதேசத்தில் வாரணசிக்கு அருகில் நேற்று ஏற்பட்ட ரயில் விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை இப்பொழுது 62 ஆக அதிகரித்திருப்பதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. விபத்தில் காயமடைந்தவர்களில் ஆறு பேர் ஆஸ்பத்திரிகளில் இறந்தார்கள். சமீப காலத்தில் ஏற்பட்ட மிகக் கோரமான இந்த ரயில் விபத்தில் காயமடைந்த 141 பேர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடகிழக்கு ரயில் பாதையில் வாரணசிச்கு அருகில் ஆற்றுப்பாலம் ஒன்றைக் கடக்கும் முன் இந்தப் பிரயாணிகள் ரயில் தடம் புரண்டு விழுந்தது. 10 பெட்டிகள் பள்ளத்தில் விழுந்து நொருங்கின. இவைகளில் 4 பெட்டிகள் முழுதும் நொருங்கிப் போயின

இந்த விபத்தில் இறந்தவர்கள் குடும்பங்களுக்கு ரூ. 500 வீதமும் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ 400 வீதமும் நன்கொடையாக வழங்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

விபத்து நடந்த இடத்துக்கு இந்திய ரயில்வே துறை அமைச்சர் விமானத்தில் விரைந்து சென்றுள்ளார். மருத்துவ உதவிகளும் ஸ்தலத்துக்கு விசேஷ ரயிலில் அனுப்பப்பட்டுள்ளன.

## யார் ஜனாதிபதி?

### காங்கிரஸ் கட்சிக்கு தலையிடி

புதுடில்லி, ஜூன் 22

இந்திய ஜனாதிபதி தேர்தல் ஆகஸ்ட் மாதம் 16-ந் திகதி நடைபெறும் என்று இந்திய தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி பதவியில் தற்போது தற்காலிக ஜனாதிபதியாக இருந்துவரும் திரு. வி. வி. கிரியே தொடர்ந்து இருக்கவேண்டுமென பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கருதுவதாகத் தெரிகிறது. இதற்கு மத்திய அமைச்சர்கள் ஜெகஜீவன்ராம், பகிருதீன்அலி அகமத் ஆகியவர்களும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியமும் ஆதரவு தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் லோக்சபை சபாநாயகர் திரு. சஞ்சீவரெட்டியை இந்தப் பதவிக்கு நியமிக்கவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா, பாட்டீல், காமராஜர் முதலியவர்கள் விரும்புகிறார்களாம்.

இந்தப் பிரச்னையின் காரணமாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களான காமராஜருக்கும் சுப்பிரமணியத்துக்குமிடையில் பிளவு ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## கும்பாபிஷேகம்

கோண்டாவில், ஞாயிறு

கோண்டாவில் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் செங்கற்பனை புவனேஸ்வரி அம்மாளுக்கும் மூர்த்திகளுக்கும் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் வரும் புதன்கிழமை நடைபெறும்.

மண்டபத்தில் நடைபெற்றன.

இவ்விழாவில் மலேரியா ஒழிப்பு சம்பந்தமான கருத்தரங்கு முக்கிய இடம்பெற்றது. மேற்படி கருத்தரங்கில் வித்தியாலய அதிபர் திரு. ஆர். இராசநாயகமும் பொதுசுகாதாரப் பரிசோதகர் திரு. வ. சதாசிவமும், கிராம முன்னேற்ற உத்தியோகத்தர் திரு. வி. மாரிமுத்துவும், கனிஷ்ட வித்தியாலய அதிபர் திரு. பொ. சந்திரசேகரியும், வித்தியாலய மாணவ மாணவிகளும் பங்குபற்றிக் கலந்துரையாடினர்.

வித்தியாலய மண்டப நிகழ்ச்சிகளின் பின்னர் நெடுங்கேணி மகாவித்தியாலயத்திலிருந்து நெடுங்கேணி தெய்வேந்திரா தியேட்டர் உரிமையாளரால் உதவப்பட்ட மோட்டார் ஒலிபெருக்கியுடன் வித்தியாலய மாணவமாணவிகள், அதிபர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், ஊர்ப் பொதுமக்கள், பிரமுகர்கள் சுலோக அட்டைகள் ஏந்திய வண்ணம் ஊர்வலமாகச் சென்று சுகாதாரம் சம்பந்தமாகப் பிரசாரம் செய்தனர்.

கலாசாலை அதிபர் திரு. ஆர். இராசநாயகமும், பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. வ. சதாசிவமும் நன்றி கூறினர்.

## பொருட்காட்சி ஒத்திவைப்பு

காங்கேசன்துறை, ஞாயிறு

சுன்னாகம் ஸ்தகந்தவரோதயாக் கல்லூரியில் இம்மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் நடைபெறவிருந்த பொருட்காட்சி நாவலர்சிலை பவனிகாரணத்தால் அடுத்த மாதம் 4-ம், 5-ம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பொருட்காட்சி தினங்களில் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

## தி. மு. க.வை தடைசெய்யும் உத்தேசம் இல்லை

### பிரதமர் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஞாயிறு

இலங்கையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தையோ வேறு எந்தஅரசியல்கட்சியையோ தடைசெய்யும் உத்தேசம் தமக்கு இல்லையென்று பிரதமர் திரு. டட்லிசேனநாயகா அக்குறணையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

ஜனநாயக நாடொன்றில் எத்தனை அரசியல் கட்சிகளும் இயங்க முடியுமென்றும் எந்த அரசியல் ஸ்தாபனத்தையும் தடைசெய்தால் அது ஜனநாயகத்துக்குகுழிதோண்டி சர்வாதிகாரத்துக்கு அஸ்திவாரமாக அமையுமென்றும் பிரதமர் சொன்னார்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதில் மக்கள் அதிக பங்குகொண்டு உழைக்க வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

## இன்று திரும்புவார்

யாழ்ப்பாணம், திங்கள்

ஜப்பானில் நடந்த நெல் விளைச்சல் பற்றிய ஆராய்ச்சி மகாநாட்டில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட முன்னாள் சாவகச்சேரி எம். பி. குமாரசாமி இன்று கொழும்பு திரும்புவார்.

ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் நடைபெற்ற இம்மகாநாட்டிற்கு இலங்கை தாழ்ந்த பிரதேசத் தோட்டத்துரைமார் சங்கப் பிரதிநிதியாக இவர் கடந்த மாதம் 10-ந் திகதி சென்றிருந்தார். மகாநாடு இம்மாதம் 17-ந் திகதி முடிவடைந்தது. டோக்கியோ நகரத்தை சுற்றியுள்ள பகுதிகளில் பல கூட்டங்களில் திரு. குமாரசாமி சொற்பொழிவாற்றினர்.

## சூயஸ் நெடுகிலும் கடும் சண்டை

கெய்ரோ, ஜூன், 22

நேற்று ஐக்கிய அரபுக் குடியரசுப் படைக்கும் இஸ்ரேலியத் துருப்புக்களுக்குமிடையில் கடுமையான பீரங்கிச் சண்டை நடைபெற்றது. சூயஸ் கால்வாயின் நெடுகிலும் இந்தச் சண்டை நடைபெற்றது.

அரபுப்பகுதியில் ஊடுருவி வந்த மூன்று இஸ்ரேலிய விமானங்களைச் சுட்டுத்தள்ளியதாக அரபுத் தரப்பில் கூறினார்கள். ஆனால் டெல் அவிவில் இதனை இஸ்ரேலியர் மறுத்துள்ளனர். தமது படைகளுக்கு சேதங்கள் ஏற்பட்டது உண்மைதானென்றும் ஆனால் விமானங்கள் எதுவும் சேதமுறவில்லையென்றும் அவர்கள் கூறினார்கள்.

## விவசாயிகள் கஷ்டம்

புத்தளம், ஞாயிறு

முன்னூறு ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் இப்பொழுது புத்தளம் பகுதியில் தண்ணீர் இல்லாது கருகிக் கொண்டு போகின்றது. இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

வழமையாக தபோவாவில் இருந்து தண்ணீர் இப்பகுதிக்கு வரும். இப்போது தபோவாக் குளத்தில் ஒன்பது அடித் தண்ணீர் தான் இருக்கிறது.

## ரூபா700 பிணை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கற்கோவளத்தைச் சேர்ந்த சி. சண்முகலிங்கம், செ. இராசதுரை ஆகிய இருவரையும் கடந்த ஆனிமாதம் 7-ம் திகதி பருத்தித்துறை பஸ் நிலையத்தில் வைத்து காலாலும், கையாலும் அடித்து பாரதூரமான காயம் விளைவித்ததாக தும்பளையைச்சேர்ந்த மு. யோகசம்பந்தனை பொலிசார் கைது செய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் படுத்திய போது மாஜிஸ்திரேட் எதிரியை ரூபா 700 பிணையில் செல்லுமாறும் வேறொரு திகதிக்கு கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

இது சம்பந்தமாக வேறொரு நபரையும் பொலிசார் தேடி வருகின்றனர்.

## மயானத்தில் தற்கொலை

சுழிபுரம், ஞாயிறு

பொன்னாலை மயானத்தில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார், பொன்னாலையைச் சேர்ந்த அப்புத்துரை-சண்முகநாதன் என்னும் 23 வயது வாலிபன். இவர் சித்தப்பிரமையின் காரணமாகவே தற்கொலை செய்து கொண்டிருக்கவேண்டும் என்பது காலம்சென்றவரது தந்தை ஏ. அப்புத்துரை என்பவரின் சாட்சியங்களில் இருந்து தெரியவந்தது. பிரேத பரிசோதனையை எஸ். பத்மநாதன் நடாத்தினார். வலி. மேற்கு மரண விசாரணை அதிகாரி திரு எஸ். சேனாதிராசா மரணவிசாரணை நடாத்தி முடிவில்தற்கொலை என தீர்ப்பு வழங்கினார்.

விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை ஒழுங்கு செய்ய வேண்டும் என்று கேட்டுள்ளார்.

### எம். பிக்கு பதில்

தம்பலகமம் வானாற்றுப் பகுதியில் அத்துமீறிக் குடியேறிய விவசாயிகளுக்குக் காணிக் கச்சேரி நடத்தி பூரண விசாரணை செய்த பின்பே ஒவ்வொருவருக்கும் தலா 2ஏக்கர் வீதம் காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் காணி நீர்ப்பாசனஅமைச்சு மூதூர் ஆட்சிமன்ற முதல் உறுப்பினர் ஜனாப் எம். ஈ. எச். முகமதலிக்கு அறிவித்துள்ளது.

### இடம் மாறும்

இதுவரையும் மூதுரில் இயங்கி வந்த நடமாடும் தையல் நிலையத்தைச் சின்னக் கிண்ணியாவுக்குக் கொண்டு செல்வதற்குத் திருக்கோணமலை மாவட்ட இணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### வெற்றி தோல்வி இல்லை

திருக்கோணமலை உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் திருக்கோணமலை உதய சூரியன் கோஷ்டியும் கிறீன்லைட் கோஷ்டியும் தலா 3 கோல்களைப் போட்டிஆட்டத்தைவெற்றி தோல்வியின்றி முடித்துக் கொண்டன. திரு. என். சிங்காரவேலு மத்தியஸ்தம் வகித்தார்.

### பாலம் அமைப்பு

அல்லையையும் கந்தளாயையும் இணைக்கும் பாலத்திற்கான செலவுத் தொகை அடுத்த நிதி வருடத்தில் ஒதுக்கப்படும் இதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பாலம் அமைக்கும்வேலையை பொது சேவைத் திணைக்களம் பொறுப்பேற்கும்.

### இளைஞர் ஏமாற்றம்

திருகோணமலைத் தொழிற்கந்தோரில் எத்தனையோ இளைஞர்கள் . பெயர்களைப் பதிவுசெய்துவிட்டு வேலைக்குக் காத்துக்கொண்டிருக்கையில் வெளியிடங்களிலிருந்துஇப்பகுதிக்கு ஆட்கள்நியமனம் பெற்று வருவதையிட்டு திருக்கோணமலை மக்கள் பெரிதும் குறைப்படுகின்றனர். கந்தளாய்சீனித் தொழிற்சாலைக்கு மாத்தளை தொழிற்கந்தோரினூடாக நூற்றுக்கும் அதிகமானோர் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளதால் இங்குள்ள இளைஞர்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

### எம். பி. கோரிக்கை

கந்தளாய்க் குளத்து நீரை கரும்புக்கு உபயோகிக்க அரசாங்கம் முடிவு செய்ததால் இவ்வாண்டு சிறுபோக வேளாண்மைச் செய்கையை இழந்துள்ள தம்பலகமம், முள்ளிப் பொத்தானை, கந்தளாய் போன்ற இடங்களில் உள்ள புராதன வயல் சொந்தக்காரர்களுக்குத் தாமதமின்றி நஷ்ட ஈடு வழங்குவதுடன் வேளாண்மைச் செய்கை நிறுத்தப்பட்டதால் இப்பகுதி நெல்வயல்களில் விவசாயம் செய்து பிழைத்த விவசாயிகளுக்கும், குடியேற்ற வாசிகளுக்கும் நிவாரணம் வழங்கும்படி மூதூர் முதல் எம். பி. ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி காணி நீர்ப்பாசன அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாவலருக்கும் நாம் வருடா வருடம் விழாவெடுத்து, அவர் செய்த பணிகளை, மக்களிடம் எடுத்துக் கூறவேண்டும் இதற்கு நீங்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

## சிங்களத்தில் பதியப்படும்

காலி, ஞாயிறு

மலைநாட்டிலுள்ள இந்திய தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளின் பிறப்புப் பதிவு இனிமேல் சிங்களத்திலேயே நடைபெறும். இதற்கான ஒழுங்குகளை பதிவதிபர் மேற்கொண்டுள்ளார். உள்நாட்டமைச்சரின் இத்தீர்மானத்தைச் செயற்படுத்துமாறு கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, மாத்தறை மாவட்டங்களினது அரசாங்க அதிபர்களுக்கும் தோட்ட சுப்பிரிண்டன்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசகரும மொழிச்சட்டமும் தமிழ்மொழி விசேஷ உபயோகச் சட்டமும்தான் இத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு உதவியாகவுள்ளன என உள்நாட்டமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும் சிங்களத்தில் பிறப்புகளைப் பதிவதன் மூலம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் சுலபமாகச் செயற்படுத்தலாமென உள்நாட்டமைச்சைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மற்ற சமய நம்பிக்கை உங்கள் சமய நம்பிக்கையைப் போன்று உண்மையானது என்று எண்ண முடியாவிட்டாலும், மற்றவர்கள் உங்களைப்போன்று உண்மையானவர்கள் தாம் என்பதையாவது உணர வேண்டும். — மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், செளமிய வருஷம் ஆனி மாதம் 9-ந் திகதி (23-6-69)


## இ. தி. மு. கழகமும் பிரதமரும்

இலங்கையிலுள்ள திராவிடமுன்னேற்றக் கழகத்தையோ வேறு எந்த அரசியல் ஸ்தாபனத்தையோ தடைசெய்யும் உத்தேசம் தமக்கில்லையென்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகா அக்குறணையில் நடந்த ஒரு கூட்டத்தில் தெளிவாகத் தெரிவித்துள்ளார். ஒரு ஜனநாயக நாட்டில் எந்த ஓர் அரசியல் ஸ்தாபனத்தைத் தடைசெய்வதானால் அது ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கும் என்றும் பிரதமர் வலியுறுத்தியிருக்கிறார்.

இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆபத்து அதிகரித்துவருவதாகவும் 'நாம் தமிழர்' இயக்கம் பரவிவருவதாகவும் இவற்றினால் இலங்கைக்கும் குறிப்பாக சிங்கள இனத்துக்கும் பேராபத்து நெருங்கிக்கொண்டிருக்கிறதென்றும் சில அரசியல்வாதிகளும் மற்றும் சில தீவிரவாதிகளும் சில பொறுப்புவாய்ந்த பத்திரிகைகளும் கூட பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து பீதியைக் கிளப்பிவிட்டுள்ளனர். தென்னிலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் (யு. என். பி) பெரும்பான்மைப் பலம் வகிக்கும் உள்ளூராட்சி மன்றங்களும் கூட) இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் நாம் தமிழர் இயக்கத்தையும் (அப்படியொரு இயக்கம் இங்குமட்டுமல்ல இந்தியாவிலும்கூட இப்போது இல்லை) தடைசெய்ய வேண்டுமெனக் கோரி சங்கிலித்தொடர் போல தீர்மானங்கள் நிறைவேற்றி வந்தன. இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த ராஜாங்க அமைச்சர் இலங்கையில் தி மு. கழகம் என ஒன்றிருப்பதாகவே தமக்குத் தெரியவில்லையெனக் கூறி ...

நினைத்து நமது ஜனநாயக வாழ்க்கைமுறையையும் மறந்து ஜனநாயகம்பற்றிப் பேசுவோர் பலரும் அதைத் தடைசெய்யவேண்டுமெனக் கோரியதுதான் விந்தை. பிரதமரின் விளக்கம் அவர்களின் சந்தேகத்தை நீக்க உதவ வேண்டும்.

இலங்கையில் தி. மு. கழகம் பற்றியும் 'நாம் தமிழர்' இயக்கம்பற்றியும் பூச்சாண்டி காட்டியவர்கள் விஷயம் தெரியாதவர்கள் அல்லர். தெரிந்திருந்தும் தேர்தல் இலாபத்தைக் கருதியே இப் பிரசாரத்தைத் தொடக்கி அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர். பிரதமர் தமது நிலைமையைத் தெளிவுபடுத்தியதால் அவர்கள் திருப்தியடைந்துவிடுவார்களென எதிர்பார்ப்பதற்கில்லை. பிரதமரையே தி. மு. கழக ஆதரவாளர் என்றோ அனுதாபியென்றோ முத்திரை குத்தி தேர்தல் பிரசாரத்துக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சமூகவிரோத சக்திகள் நாட்டின் பலபகுதிகளில் அமைதியைக் குலைத்து வெந்த வீட்டில் பிடுங்கியது அறுதி என்ற சொந்தஇலாபத்தைக் கருதியும் செயற்படத்தொடங்குவார்களென எதிர்பார்க்கலாம். இதற்கு அட்டன் தலவாக்கொல்லைப் பகுதியில் சமீபத்தில் நடந்த சம்பவங்கள் சான்று.

இதே சமயம் இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் மற்றும் தமிழ் பேசும் பொது மக்களுக்கும் சில பொறுப்புகளும் கடமைகளும் உண்டு. இலங்கையில் திராவிடமுன்னேற்றக்கழகம் என்ற பெயரில் மூன்று நான்கு தலைமையின் கீழ் இயங்கிவந்தன. பின்னர்சிலர் எடுத்தமுயற்சியினால் ஒன்று சேர்க்கப்பட்டன, ஆனாலும் இப்போதும்கூட இ. தி. மு. க.வில் ஒரு பிரிவினர் கழகம் அரசியல் இயக்கம் என்றும் மற்றொரு பிரிவினர் கழகம் கலாசார இயக்கம்

பத்தாண்டு நிறைவு விழா — கூடைப்பந்தாட்டம்

# கூடைப் பந்தாட்டத்துக்கு இங்கு நல்ல எதிர்காலம்

# ஆயிரக்கணக்காகத் திரண்ட மக்கள் இதை நிரூபித்தனர்

## முடங்கியிருந்த ஆர்வத்துக்கு 'ஈழநாடு' தூண்டுதல்

— ஏ. பாலசிங்கம் —

[ஈழநாடு பத்தாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி பற்றி அதன் அமைப்பாளரான வடமாகாண கூடைப்பந்தாட்டச் சங்கச் செயலாளரான திரு ஏ. பாலசிங்கம் இங்கு எழுதுகிறார். பல்வேறு நிகழ்ச்சிகள் பற்றியும் அதன் அமைப்பாளர்கள் எழுதும் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவரும்.]

''ஈழநாடு'' பத்திரிகையின் ஆண்டு விழாவை மிகக் கோலாகலமாகக் கொண்டாடுவதையொட்டி யாழ்நகர் என்றுமே கண்டிராத மின் ஒளியில் கூடைப்பந்தாட்டப் போட்டிகள் கண்கவர் முறையில் நடைபெற்றன.

வடமாகாண கூடைப்பந்தாட்டச்சங்கம் இப்போட்டியைச் சிறந்த முறையில் ஒழுங்கு செய்திருந்தது. கல்லூரிகளும், விளையாட்டுக் கழகங்களுமாக எட்டுக் கோஷ்டிகள் இப்போட்டியில் பங்குபற்றிய போதிலும், எத்தனையோ இரசிகர் கூட்டத்தை இப்போட்டி உருவாக்கியுள்ளதென்பது வெறும் புகழுரையன்று.

போட்டி ஆரம்பமான நாள்தொடக்கம் முடியும் வரையும் நாளுக்கு நாள் விளையாட்டு இரசிகர்களின் தொகை பல்கிப் பெருகிக் கொண்டே வந்தது. கூடைப்பந்தாட்டத்தில் இன்றளவும் ஆர்வங்கொள்ளாத எம்மவரது உள்ளத்தை இப்போட்டி தூண்டிவிட்டமை, 'ஈழநாடு' எமக்களித்த அரும்பெரும் பணியாகும். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வட பிரதேசத்திலிருக்கும் சகல பாடசாலைகளும், விளையாட்டுச் சங்கங்களும் கூடைப்பந்தாட்டத்தில் கூடிய ஆர்வங்கொண்டு மேலும் மேலும் போட்டிகளிற் கலந்து இந்த உயரிய விளையாட்டை வளர்க்க முன்வர வேண்டும்.

விளையாட்டு ரசிகர்களும் விளையாட்டு வீரர்களும் மாத்திரமல்ல, ஏனையோரும் உடலுறுதியுள்ளவர்களாகி நல்ல திடகாத்திரமான தேசிய இனத்தையுருவாக்குவர். இதற்கு ஊக்கமளிக்கும் நல்லபணியாக 'ஈழநாடு' ஏற்படுத்திய விளையாட்டுப் போட்டிகள் அமைந்தன. இப்பணிக்கு நாமனைவரும் கடமைப் பட்டவர்களாவோம்.

### வழக்கத்துக்கு மாறு

வழக்கமாக இவ்விதமான விழாக்களில் 'ஈருருளி' ஓட்டத்தையும், மரதன் ஓட்டத்தையுந்தான் நாங்கள் விளையாட்டுக்களாகக் கண்டிருக்கின்றோம். 'ஈழநாடு' சகல விளையாட்டுக்களையும் போட்டியிற் சேர்த்தமை வரவேற்றற்குரியது. யாழ்ப்பாணத்தில் கூடைப்பந்தாட்டம் உருவாகிய காலத்திலிருந்து ஐந்து கல்லூரிகள் மாத்திரம் இவ்விளையாட்டில் கலந்து கொண்டன. இக்கல்லூரிகளின் பழைய மாணவர்கள் தனிப்பட்ட கழகங்களை உருவாக்கினர். இவ்விளையாட்டிற்கு ஏனைய விளையாட்டுக்களைப்போல் அதிகபணமும், நேரமும் செலவு செய்ய வேண்டியதில்லை. சிறியளவு நிலம் போதுமானது. ஆனால் அதன் சுறுசுறுப்பான ஆட்டம் விளையாடுபவர்களையும் பார்வையாளர்களையும், விறுவிறுப்படையச் செய்யுமியல்பு வாய்ந்ததென்பது அனுபவவாயிலான முடிவாகும்.

இவ்விளையாட்டினால், கூட்டுறவு மனப்பான்மையும், திடீர் முடிவுக்கு வரும் உளப்போக்கும் உள்ள நல்ல பிரஜைகளை நாம் பெறலாம். வருங்காலத்தில் இவ்விளையாட்டிற்கு நல்லமதிப்பு உண்டென்பதை இவ்விளையாட்டைப் பார்க்க வந்த திரளான மக்கள் கூட்டம் மெய்ப்பித்துள்ளது.

### ஊக்கம் தேவை

நடந்து முடிந்த போட்டி

யோன் கல்லூரி 44 புள்ளிகளைப் பெற்று, வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றனர்.

'ஓல்ட்கோல்ட்ஸ்' விளையாடிய திறமையின்படி அவர்கள் எண்ணியபடி பந்து கூடைக்குள் சென்றிருந்தால் வெற்றிக்கிண்ணம் அவர்களுக்கே கிடைத்திருக்கும். பரியோவான் கல்லூரிக்காக, பொன்ராஜ். பற்றிரிக், சத்தியநாதன் மிகவும் திறமையாக விளையாடினார்கள். 'ஓல்ட்கோல்ட்ஸ்'க்காக, செல்வராஜன், மில்ஸ், கோட்பிரட் இவர்களின் விளையாட்டு மெச்சத்தக்கது. ஆட்டத்திற்கு திரு. ஏ. பாலசிங்கம் திரு. ஆர். சுந்தரலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

### முடிவுகள்

கூடைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்: ('பி' பிரிவுகள்) ஓல்ட கோல்ஸும் ஜூனியர் ரெக்னிக்கல் இன்ஸ்டிட்டியூட்டும் 28-15; கோப்பாயும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியும் 44—16; யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியும் ஓல்ட்கோல்ட்ஸும் 18-38; ஜூனியர் ரெக்னிக்கலும் யாழ் மத்திய கலலூரியும் 34-18; ஓலட்கோலட்ஸும் கோப்பாய் ஸ்போட்ஸ் கிளப்பும்25-21. ஜூனியர் ரெக்கும் கோப்பாய் ஸ்போட்ஸ் கிளப்பும் 28-33.

('ஏ' பிரிவுகள்) மகாமெமோரியலும், எலாராவும் 22-24; யாழ்ப்பாணம் பொலிஸும் சென் பற்றிக்ஸும் 16-50; மகாமெமோவும் யாழ். பொலிஸும் 35-10; சென்பற்றிக்ஸ் கலலூரியும் எலராவும் 31-22: சென்பற்றிக்ஸ் கலலூரியும்மகாமெமோரியலும் 41-20 : எலராவும் யாழ் பொலிஸும் 29-28; சென் பற்றிக்ஸும்ஓலட்கோலட்ஸ்

ஆசிரியருக்குக் கடிதம்

## ஒரு வேண்டுகோள்

சிங்கள மொழியைப் போதனா மொழியாகவும் பெளத்தத்தையும் ஏற்க விரும்பும் தமிழ் மாணவர்களே, பெற்றோர்களே! நீங்கள் உங்கள் எதிர்காலம் என்னவாயிருக்கும்என்பதை யோசித்ததுண்டா? உலகம் போற்றும் தமிழ் மொழியையும் இந்து சமயத்தையும் நீங்கள் இழக்கப் போகிறீர்கள் போலுமென எமக்குத் தோன்றுகிறது.

வான்புகழ் கொண்ட வள்ளுவரின் தாய் மொழிதமிழ். உயர் கம்பனின் தாய்மொழி

பெளத்தர்களும் சிங்கள அரசாங்கமும் ஏழைப் பிள்ளைகளுக்குக் கல்வியும் வேலைவாய்ப்பும் அளிப்பதானல் உங்களிலும் ஏழ்மை கொண்டுள்ள தேயிலைத் தோட்டத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு ஏன் இன்னும் நல்ல கல்வியும், வேலைவாய்ப்புகளையும் அளிக்கிறார்கள் இல்லை? அவர்களுடைய தமிழ்ப்பாடசாலைகளை ஏன் இன்னும் அரசாங்கம் ஏற்கவில்லை? அது ஏன் ... யானதும் ... இன்றைக்கும் அந்த ஏழைப்

# ஐயாறன் எழுதுவது

இராமநாதன் இசைக்கல்லூரி அதிபராக இருந்து வரும் கல்யாண கிருஷ்ண பாகவதர் வருகிற செப்டம்பர்மாதம்அமெரிக்காவுக்குச் செல்லுகின்றார். அங்கு அமெரிக்கருக்கு கர்நாடக சங்கீதம் கற்பிக்க, இரண்டு வருட ஒப்பந்தத்தில் செல்லுவதாகத் தெரிகிறது இதற்காக அவரைப்பாராட்டுகிறேன்.

இதுவரை யோகாசனம், பரதநாட்டியம் இவற்றில் தான் வெளிநாட்டினருக்கு அக்கறை ஏற்பட்டது. இப்போது கர்நாடக இசையிலும் அவர்கள் பயிற்சி பெற முன்வருவது வரவேற்கத் தக்கதாகும். இதனல் நமது அருங்கலைச் சிறப்புகள் உலகில் பரவுவதுடன், நமது கலைஞர்கள் உலகில் பல நாடுகளிலும் பரவி கலைத் தொண்டு புரியவும் வாய்ப்பிருக்கும்.

0 0 0

ஈழத்திலே பாகவதர் அவர்கள் சென்ற சுமார் இரண்டு வருட காலத்தில் இசைக்கலை வளர நல்லபணி செய்துள்ளார். இராமநாதன் இசைக் கல்லூரி அதிபர் பதவியை அவர் ஏற்றபின், அதிகமான மாணவ மாணவிகள் அதில் சேர்ந்து நல்ல பயனடைந்துள்ளதாயும், காலை 7 மணி முதல் இரவு 8 மணிவரையிலும் கூட அவர் சிரமம் பாராமல் இசைப்பயிற்சி அளித்துவந்துள்ளதாயும், அவரைப் போன்ற களைப்பறியாத, ஊக்கமுள்ள திறமையான இசை ஆசிரியர் கிடைப்பது மிகவும் அருமை என்றும், விஷயறிந்த அன்பர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார்.

அவர் இங்கிருந்து செல்லுவது ஈழத்துக்கு நஷ்டம் தான். என்றாலும் அவரது இடத்துக்கு சங்கீத மேதையான சித்தூரார் வர ஒப்புக்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இக்கல்லூரியில் இசையின் தரம் குறையாமல் இருக்க, சித்தூரார் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்று பாகவதர் விசேஷமாகக் கேட்டுக் கொண்டதாகவும் தம்மாலான கலைப்பணியைச் செய்ய அவர் இசைந்ததாகவும் அறிய வந்தேன்.

சித்தூராருக்கு வயது இப்போது 69. இந்த வயதிலும் அவரது சாரீரம் தளராமல் பழைய கம்பீரத்துடன் இருப்பதாயும் ஓர் இசை அன்பர் வியப்புடன் தெரிவித்தார். அவரது கச்சேரி இந்தவாரம் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் யாழ். பிரதேச கலாமன்றத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கின்றது இசை அன்பர்களுக்கு இது நல்ல வாய்ப்பு

தமிழகத்தில் மட்டுமல்ல ஆந்திரநாட்டிலும் சித்தூராருக்கு நல்ல மதிப்பும் செல்வாக்குமுண்டு ஹைதராபாத்தில் ஓர் இசைக்கல்லூரியை ஆரம்பிக்க சித்தூராரின் உதவியைத்தான் நாடியுள்ளனராம். என்றாலும் அந்த அழைப்பை ஏற்காமல், ஈழத்தில் இசைப் பணி செய்யவே தாம் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டிருப்பதாயும் இங்கு தமது சிஷ்யர்கள் பலரின் அன்பு தம்மனதைப் பெரிதும் கவர்ந்ததாகவும் தெரிவித்தார். இங்கு அவருக்கு பல இடங்களிலும் சிஷ்யர்களால் விருந்து உபசாரங்கள் நடந்துவருகின்றன.

இராமநாதன் இசைக்கல்லூரியையும், அங்கு நடத்தப்படும் பரீட்சை பெறுபேறுகளையும் அங்கீகரிக்க அரசாங்கம் முன்வரக்கூடுமென்று அறிய வந்தேன். இந்த அங்கீகாரத்தை அரசாங்கம் இனியும் தாமதிக்க நியாயமில்லை.

அக்கல்லூரியிலே ஒரு மாணவரின்சாரீரம், மதுரை சோமுவை போல இருப்பதாகவும் தக்க பயிற்சி செய்தால் அவரது எதிர்காலம் மிக விசேஷமாக இருக்குமென்றும் தெரிவித்தார் அவர். இசை மாணவரில் பலரும் ஆசிரியர்களாகவே ஆவல் கொண்டிருக்கிறார்களாம். இசையின் மேலான நோக்கம் ஆத்மீயமானது. நாத உபாசனையால் இறைவனை அடையலாமென்று கூறுவர். ஆனல் முதலில் பசிப் பிரச்னையைத் தீர்த்தபின் தானே ஆத்மீகம்! கர்நாடக இசைவல்லுனருக்கு நல்ல எதிர்காலம் காத்துள்ளதாகவே நம்புவோம்.

# பாரிஸ் பேச்சில் மீண்டும்முட்டுக்கட்டை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜாங்க அமைச்சர் இலங்கையில் தி மு. கழகம் என ஒன்றிருப்பதாகவே தமக்குத் தெரியவில்லையெனக் கூறியதுடன் இலங்கை தி. மு. கழகத்துக்கும் இந்திய தி மு கழகத்துக்கும்தொடர்பில்லையென இந்தியத் தி. மு. கழகத் தலைவர்கள் அளித்தஉறுதியிலும் தமக்கு நம்பிக்கை யிருக்கிறதென்பதையும்தெளிவுபடுத்தினுர். ஆயினும் தி. மு. க. நாம் தமிழர் இயக்க பூச்சாண்டிப் பிரசாரத்தை முளையிலேயே இள்ளியெறிய அரசாங்கம் துணியவில்லை. என்ருலும் தி மு. கழகத்தைத் தடைசெய்யவேண்டுமெனக் கோமு ஆட்சிமன்றத்தில் ஹபரதுவ பிரதிநிதி கேட்ட கேள்வியொன்றுக்குப் பிரதமர் பதிலளிக்கையில் இ. தி. மு. கழகத்தை தடைசெய்யும் உத்தேசம் இல்லையென்றும் அதற்கு அவசியம் இல்லையென்றும் தெரிவித்திருந்தார். இப்பொழுது பொதுக்கூட்டத்திலும் அவர் தமது நிலையைத் தெளிவுபடுத்தியிருக்கிறுர். ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் பிரதமர் கொண்டுள்ள உறுதியைப் பாராட்ட வேண்டும். தெரிந்தோ. தெரியாமலோ தி மு. கழகம் என்றதும் ஏதோ ஒரு பூதம் என இப்போதும்கூட இ. தி. மு. க.வில் ஒரு பிரிவினர் கழகம் அரசியல் இயக்கம் என்றும் மற்றெரு பிரிவினர் கழகம் கலாசார இயக்கம் என்றும் வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவத்துவருகின்றனர். மக்கள் எல்லோருமே முன்னேறவேண்டுமென்பதுதான் தமிழன் கொள்கையும் இலட்சியமும் திராவிடர்தான் முன்னேறவேண்டுமென்பதன் அர்த்தம் என்ன? இங்கு திராவிடர் யார்; ஆரியர் யார்? இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டிலிருந்த நிலையும் இப்போது இருக்கும் நிலையும் வேறு பெரியாரின் திராவிடக் கழகமும் அமரர் அண்ணுவின் திராவிடமுன்னேற்றக்கழகமும் கூட, கால நேரத்துக்கேற்ப தங்கள் நோக்கையும் போக்கையும் மாற்றிவந்திருக்கின்றன. இவைபற்றி இங்குள்ள தி. மு கழகத்தினரும் பொது மக்களும் சிந்திக்கவேண்டும். மக்களுக்குச் சேவை செய்வதற்கு அவர்களுடைய முன்னேற்றத்துக்காக உழைப்பதற்கு ஒருவர் தமது நாட்டில் கட்டிவளர்த்த ஒரு ஸ்தாபனத்தின் பெயரைப் பயன்படுத்தித்தான் செய்ய வேண்டுமென்பதில்லையே.

# ஆங்கில வகுப்புகளில் சேர தமிழ் மாணவர்களுக்குவசதி

## தமிழ் நாடு அரசு சலுகை

சென்னை, ஜூன் 22

எஸ் எஸ். எல். சி. யில் ஆங்கிலத்தை போதனு மொழியாகக் கொண்ட தமிழ் மாணவர்களை அரசினர் கல்லூரிகளில் பி. யு. சி. யில் ஆங்கில போதனு மொழி வகுப்புகளில் சேர்க்கக்கூடாது என்று விதித்திருந்த தடையை தமிழக அரசு நீங்கியுள்ளது.

பி. யு. சி. யில் ஆங்கில போதனு மொழி வகுப்புகளில் சேருவதற்கு இப்படிப்பட்ட தமிழ் மாணவர்கள் மற்ற தமிழரல்லாத மாணவர்களுக்குச்சமமாக பாவிக்கப்படுவார்கள்.

அரசினரின் உத்தரவை ஆட்சேபித்துபல புகார்கள் வந்ததன் பேரில் மேற்கண்டவாறு மாற்றப் பட்டுள்ளதாக கல்வி இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: அரசினர் கல்லூரிகளில் பி. யு. சிக்கு விஞ்ஞான பாடங்களில்-ஓர் ஆங்கில போதனு மொழி வகுப்பும், இரு மொழி, பல மொழி பேசும் இடங்களில் சரித்திரம், பூகோளம் போன்ற விஞ்ஞானமல்லாத பாடங்களுக்கு ஓர் ஆங்கில போதனு மொழி வகுப்பும் இருக்கும். உதகை, கோவை, பொன்னேரி, வடசென்னையில் உள்ள பெண்களுக்கான அரசினர் கலைக் கல்லூரி, ராணி மேரி கல்லூரி ஆகியவைகளில் விஞ்ஞானமல்லாத பாடங்களுக்கு ஆங்கில போதனு மொழி வகுப்பு இருக்கும். மற்றவைா அரசினர் கல்லூரிகளிலும் விஞ்ஞானமல்லாத பாடங்கள் தமிழிலேயே போதிக்கப்படும்.

பி. யு. சியில் விஞ்ஞான பாடங்களுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்புகள் இருப்பின், ஒரு வகுப்பு மட்டுமே ஆங்கிலத்தைப் போதனு மொழியாகக் கொண்டதாய் இருக்கும். மற்றவை தமிழில் நடக்கும். ஒரே வகுப்பு மட்டும் இருந்தால் அது தமிழில் தான் இருக்கும்.

அரசினர் கல்லூரிகளில் பி யு. சி. யில் ஒரே ஒரு ஆங்கில போதனு மொழி வகுப்பு மட்டுமே இருக்கும் என்ற அரசினர் கொள்கையில் மாறுதல் இல்லை.

கள் போலுமென எமக்குத் தோன்றுகிறது.

வான்புகழ் கொண்ட வள்ளுவரின் தாய் மொழிதமிழ். உயர் கம்பனின் தாய்மொழி தமிழ் இறைவனைக் காட்டும் மார்க்கமே சமயம். அவனின் திருவடிதான் தண் நிழல். இதனை விடுத்துவனுந்தரத்துக்குப் போய் அலைவது நல்லறிவுக்கு இழுக்கு. சிந்தித்துப் பாருங்கள். எமது கண்ணீர் முதலைக் கண்ணீரென்று எண்ணிவிட வேண்டாம். நீங்கள் எங்களின் சகோதரர்கள். உங்களை நாம் மறக்க விரும்பவில்லை. உங்களின் குறைகளை தீர்த்து வைப்பதற்காக நாம் பாடுபடுவது உங்களுக்குத் தெரியாதா.

பல்லாயிரம்வருடங்களாக இருந்து வரும் பழக்க வழக்கங்களை உடனடியாகத் தீர்த்து வைப்பது சுலபம் என்று நீங்கள் உண்மையில் கருதுகிறீர்களா? ஆனுல்இக்குறைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி போடுவது திண்ணம். நீங்கள் தளரவேண்டியதில்லை இன்னும் சொற்பகாலம்பொறுத்திருங்கள், எல்லாம்சரிவரும். இது உறுதியாய்விட்டது. மனைவியுடன் கோவித்துக் கொண்டு, தமக்குத் தென்னைக் கொடுக்கும் உணவுகளைக் கொண்டுள்ள பானைசட்டிகளை அடித்துடைக்கும் வெறி பிடித்த மனிதனுக்கு ஒப்பாக நீங்கள் இருக்கக் கூடாது. சாதிக் கொடுமைகளைத் தகர்க்கவேண்டுமென நின்ற பாரதியாே,

''ஆயிர முண்டிங்கு சாதி, எனில் அன்னியர் வந்து புகலென்ன நீதி?'' என்று பாடியுள்ளார். நாம் ஒற்றுமைப்படவில்லையானுல் எமது தமிழ் சமுதாயம் அழிந்துவிடும் என்று அஞ்ச வேண்டியதாக இருக்கிறது. இந்த இனக் கொலையையே சிங்களச் சகோதரர்கள் விரும்புகின்றனர். அதற்காக திட்டமிட்டு பல சூழ்ச்சிகளைக் கையாண்டு செயலாற்றுகின்றனர். இதை அறிந்திருந்தும் அவர்களது சதிவேலைக்கு உடந்தையாகவிருப்பது விந்தையில் விந்தையே!! அவர்கள் உங்களுக்கு அளிக்கும் சலுகைகள் தூண்டிலில் இடப்பட்டிருக்கும் இரைகளே! இதை மறக்காதீர்கள்.

தமிழ்ப்பாடசாலைகளை ஏன் இன்னும் அரசாங்கம் ஏற்கவில்லை? அதுதான் முறையானதும் நீதியானதும். இன்றைக்கும் அந்த ஏழைப் பிள்ளைகளது நிலை ஒரே அல்லோலகலலோலம். இதை நீங்கள் அறியவில்லையா? எப்போதும் தமிழ்ப் பிள்ளைகளின் போதனு மொழி தமிழ் மொழியாகவே இருக்கவேண்டும். விதிவிலக்காக அரசாங்கம் அமைத்த சிங்கள போதனு மொழிச் சட்டத்தை ஓர் இனத்தின் பெருந்தொகையினரான பிள்ளைகளுக்கு வலுப்படுத்துவது எவ்வாற்ருலும் சட்டவிரோதமானதே. இதை மாணவர்களும் பெற்ருேர்களுமாகிய நீங்கள் எதிர்த்து, நீங்கள் காட்டவிருந்த சம்மதத்தையும் வாபஸ் பெற வேண்டுமென்று நாம் வேண்டுகின்ருேம். அரசாங்கம் பொறுப்பு எற்பதாஞல் உங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழியை போதனு மொழியாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்துங்கள்.

அரசாங்கமும், அதற்குத் துணையாகவுள்ள சிங்கள பௌத்த சகோதரர்களும் தமதுஇனப்பிரிவினைச்செயல்களினுல தேசிய ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கின்றனர் என்பதை அறிந்திலர் போலும். இவர்கள் இந்த நாட்டைத் துண்டு போட முயற்சிக்கின்றனர்! இதற்கு அவர்களே பொறுப்பாளியாவர்.

உயர்சாதிமான்கள் என்று தம்மைச் சொல்லுகிறவர்கள் மனமாற்றம் அவசியம் அடையவேண்டும் மனித அடிப்படை உரிமைகளை யாவர்க்கும் வழங்குவது தான் தலையாய நீதி. கொடுமையான பழமைகளில் தொங்கிக்கொண்டிருப்பது நல்ல நாகரிகமாகாது. எங்கெங்கே குறைகுற்றமிருக்கிறதோ அங்கங்கே எமது கண்கள் சென்று தண்ணளி செய்யவேண்டும். அது தான் உண்மையான கண்ணேட்டம். இன்றேல் அவைகள் புண் என்று வையப்படும்.

சி. பொன்னையா,

(அகில இலங்கை இந்து மாமன்ற ஆலயப் பிரவேசக் குழுச் செயலாளரும், யாழ். பெற்ருர் சங்கச் செயலாளரும்)

யாட்டைப் பார்க்க வந்த திரளான மக்கள் கூட்டம் மெய்ப்பித்துள்ளது.

### ஊக்கம் தேவை

நடந்து முடிந்த போட்டியினுல் ஆக்கப்பட்ட ஆர்வத்தைத் தொடர்ந்து, மாவட்ட ரீதியில் கூடைப்பந்தாட்ட விளையாட்டு வளர விளையாட்டு அமைச்சும், கல்லூரி அதிபர்களும், விளையாட்டுக் கழகங்களும் இவ்விளையாட்டுக்கு அதிக ஊக்கமும் மதிப்பும் அளிப்பார்களென எதிர்பார்க்கின்ருேம்.

### திறமான ஆட்டம்

'ஈழநாடு' கூடைப்பந்தாட்டப்போட்டி இரு பிரிவுகளில், நடைபெற்றது. 'ஏ' பிரிவில் பரியோவான் கல்லூரியும், 'பி' பிரிவில் ''ஓல்டுகோல்ஸ்''சும், சாம்பியன்களாக வெற்றிபெற்று பின்னர் இவ்விரு கோஷ்டிகளும், இறுதிப் போட்டியில் 13-ந் திகதி மாலை 7 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மின்னெளித் திடலில் போட்டியிட்டார்கள். போட்டி ஆரம்பமான நிமிடத்திலிருந்து முடியும் வரை, பார் வயாளர்களை மிகவும் விறுவிறுப்பாக வைத்திருந்தது. முதல் நிமிடத்திலேயே பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த பொன்ராஜ் 2 புள்ளிகளைச் சேர்த்தார். இதையடுத்து 4 புள்ளிகள் பரியோவான் கல்லூரிக்குக் கிடைத்தது. இந்நிலையில், திடீர், திடீர் என 'ஓல்ட் கோல்ஸ்' இரண்டு முறை கூடைக்குள் பந்தையனுப்பி 4 புள்ளிகளைச் சேர்த்தனர். பரியோவான் கல்லூரி மிகத் திறமையாக விளையாடி 8 புள்ளிகளைப் பெற்றனர். 'ஓல்ட். கோல்ட்ஸ்' 6 புள்ளிகளைக் கைப்பற்றினர். பரியோவான் கல்லூரி மின் வேகத்தில் விளையாடி 12 புள்ளிகளைப் பெற, ஓல்ட் கோல்ட்ஸ் 6 புள்ளிகளுடன் இருந்தனர். இடைவேளைக்கு ஐந்து நிமிடம் இருக்க, பரியோவான் கல்லூரிக்கு 19 புள்ளிகளும் ஓல்ட்கோல்ட்ஸ்க்கு 15 புள்ளிகளும் இருந்தன.

இடைவேளையின் பின், பரியோவான் கல்லூரி, ஆட்டத்தின் அமைப்பை மாற்றி விளையாடத் தொடங்கினர், இதனுல், அவர்கள் 37 புள்ளிகளைப்பெற, ஓல்ட் கோல்ட்ஸ் 21 புள்ளிகளைப் பெற்றனர். பின்பு புள்ளிகள் 39 23 ஆக்கப்பட்டன. இந்நிலையில் 'ஓல்ட் கோல்ட்ஸ்' மிகவும் திறமையாக விளையாடி 33 புள்ளிகளைப் பெற்றனர். பரி

31-22: சென்பற்றிக்ஸ் கல்லூரியும்மகாமெமோரியலும் 41-20 : எலராவும் யாழ் பொலிஸும் 29-28; சென் பற்றிக்ஸும்ஓலட்கோலட்ஸ் 'பி' பிரிவும் 44-35.

யாழ் பொலிஸ் விளையாட்டுக்கழகமும், மகாமெமோரியல் விளையாட்டுக்கழகமும் நாம் நடத்திய கூடைப்பந்தாட்டப் போட்டியில் முதன்முறையாகக் கலந்து கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது. சகலசங்கங்களுக்கும் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது பாராட்டுகளைத் தெரிவிக்கின்ருேம்.

(தொடரும்)

### 3பிரமாண்டமான ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் 3 இடங்களில் ருேட்டில் இருபக்கங்களிலும் பந்தல்கள் அமைத்து குளிர் பானம் வழங்கப்படும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவிகளும், ஒருபந்தல் அமைத்து குளிர்பானம் வழங்குவார்கள்.

விழா நடைபெறும் நான்குதினங்களும், காலை 7 மணிமுதல் 2 மணிவரை, இரு கல்லூரி சாரணர்களும், மாலை 3 மணி முதல் இரவு 7 மணிவரை இரு கல்லூரி சாரணர்களும் கடமையாற்றுவார்கள். இரவு 7 மணிக்குப்பின்னர் தொண்டர்கள் கடமையாற்றுவார்கள்.

29-ம் திகதி காலை மகாஜன கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி சாரணர்கள் கடமையாற்றுவார்கள் 30-ம் திகதி காலை உரும்பிராய் இந்துக் கல்லூரி அருணோதய கல்லூரி, யூனியன் கல்லூரி, சாரணர்கள் கடமையாற்றுவார்கள். 30-ம் திகதி மாலை ஸ்ரான்லி கல்லூரி, மத்திய கல்லூரி சாரணர்கள் கடமையாற்றுவார்கள். 1-ம் திகதி காலை பரமேஸ்வரா கல்லூரி, ஸ்ரான்லி கல்லூரி சாரணர்கள் கடமையாற்றுவார்கள். 1-ம் திகதி மாலை மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி சாரணர்கள் கடமையாற்றுவார்கள். 2-ம் திகதி மாலை சகல பாடசாலை சாரணர்களும் கடமையாற்றுவார்கள்.

### டி. ஐ. ஜி. விஜயம்

நல்லூர், திங்கள்

வடபிராந்திய உதவி பொலிஸ் அதிபர் திரு. டெடிகம, நாளைமுதல் 28-ம் தேதிவரை வடமாகாணத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களையும் உத்தியோகபூர்வமாகப் பார்வையிடுவார்.

# பாரிஸ் பேச்சில் மீண்டும்முட்டுக்கட்டை

பாரிஸ் ஜூன் 22

வியட்னும் சமாதானப் பேச்சில் இரு தரப்பும் திடீரென்றுகடுமையான நிலையை மேற்கொண்டு முட்டுக்கட்டை நிலைமையை ஆழமாக்கியுள்ளன.

பேசி முடிவுகொள்வதற்குப்பதிலாகப்பலாத்காரத்தின் மூலம் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பார்ப்பதாக அமெரிக்காவும் தென்வியட்னுமும் மறு தரப்பு மீது குற்றம் சாட்டின. வடவியட்னுமும் புரட்சி அரசும் அமெரிக்காதான் சண்டையைத் தீவிரப்படுத்துவதாகபதிலுக்குக்குற்றம் சாட்டி முழு வெற்றி அடையும்வரை போராடப் போவதாக மார்தட்டின.

தேசிய விடுதலை முன்னணியும் ஜனுதிபதி நிக்ஸனும் சென்ற மாதம் சமாதான திட்டங்களை அறிவித்ததிலிருந்து பாரிஸ் பேச்சில இவ்வளவு கடுமையான நிலைமை எற்பட்டதிலலை,

அமெரிக்கப் பிரதிநிதிகள் சமசரப் போக்கை கைவிட்ட வடவியட்னுமின் பிடிவாதப் போக்கு பலாத்கார கெடுபிடிகள் மூலம் காரியத்தை சாதித்துக் கொள்ள விரும்புவதைக் காட்டுகிறது என்ருர்.

நிக்ஸனும் தியூவும் மிட்தீவில சந்தித்ததை வடவியட்னும் பிரதிநிதி கடுமையாக தாக்கிப் பேசினுர் அது சகாதானத்துக்கு பதில சண்டைக்கதவையே திறந்து வைத்திருக்கிறது என்ருர் அவர்.

நிக்ஸன் அரசு தென் வியட்னுமை தொடர்ந்து ஆதரிப்பதுதான் உண்மையில் சமாதான பேச்சுக்கு முட்டுக் கட்டையாயிருக்கிறது என்று புதிய அரசுப் புரட்சிபிரதிநிதி கூறினுர்.

தென் வியட்னு மிலிருந்து உங்கள் துருப்புகளை வாபஸ் பெறத் தயாரா? என்று யு எஸ் பிரதி நிதி கேட்டார் ஹனுய் பிரதிநிதி நீளமாகப் பேசிய போதிலும் அதில இந் க்கேள்விககுப் பதில இலலை.

### ஜவுளி விலை குறையாது

கொழும்பு, ஞாயிறு

அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிழ் விலை கூடியதால் இறக்குமதி ஜவுளிகளின் விலை அதிகரிக்கமாட்டாது என்று லங்கா சலுசல அதிபர் தெரிவித்தார்.

### லொறியால் விழுந்து மரணம்

நல்லூர், திங்கள்

பரந்தனில், லொறியிலிருந்து விழுந்ததாக கூறப்படும் சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படு முன்னர் மரணமானுர். கிளிநொச்சி பொலிஸார் இதுபற்றி விசாரணை செய்துவருகிருர்கள். இறந்தவர், அந்த லொறியில் கிளீனராக கடமையாற்றி வந்தார் எனக் கூறப்படுகிறது.

### மகா வித்தியாலயத்தில் மாணவர்சஞ்சிகை

புலோலி, ஞாயிறு

நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் முதலாண்டு கனிஷ்ட பொதுத்தராதர வகுப்பு மாணவர்கள் தமது மாத இதழான 'வான்முகில்' என்னும் பத்திரிகையை கடந்த புதனன்று வெளியிட்டார்கள். மகாவித்தியாலய அதிபர் திரு. கே, சிவசிதம்பரம் வைபவத்திற்குத தலைமை வகித்தார்.

இவ்விழாவில் பேசிய கரவெட்டி வாணிகலைக் கழக இயக்குநரும் மகாவித்தியாலய ஆசிரியருமான பண்டிதர் திரு. க-வீரகத்தி புனிதமான கல்வியில் அரசியலைப் புகுத்தக் கூடாதென்றும், மாணவரிடையே மறைந்திருக்கும் அறிவை வெளிப்படுத்துவதற்கு இம் மாதிரிப்பத்திரிகைகள் ஒவ்வொரு பாடசாலைகளிலும் வெளியிடப்பட வேண்டுமென்றும் சொன்னுர். திரு. வி. மகாலிங்கமும் பேசினுர்.

### கோண்டாவிலில் கொண்டாடினர்

கோண்டாவில் ஞாயிறு

கோண்டாவில் சைவத் தமிழ் கலவன் பாடசாலையில் மாணிக்கவாசகர் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு திகதி ஜூன் மாதம் 23ம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org